பக்கங்கள்:12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir


விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 28 புதன்கிழமை 13.07.2022 கதிர் 250

**இனி இது ரகசியம் அல்ல!**

ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவின் பதவி விலகல் கடிதம் எதுவும் இன்று அதிகாலை வரை உத்தியோகபூர்வமாக சபா நாயகரிடம் கையளிக்கப்பட்டதாக செய்தி இல்லை. எனினும் இன்றைய திகதி குறிப்பிட்டு ராஜினாமாக் கடிதத்தை ☞ 2

## கட்டுநாயக்கா ஊடாகத் தப்பிச் செல்ல முயன்ற கோட்டாபயவும் விரட்டியடிப்பு

### ஏ.எவ்.பி. செய்திச் சேவை தகவல்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் இரவு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக நாட்டை விட்டு வெளியேற முயற்சித்த போதிலும் இலங்கையின் குடிவரவு, குடியகல்வுப் பணியாளர்கள் அதனைத் தடுத்தனர் என்று உத்தியோகபூர்வ தரப்புக்களை மேற்கோள்காட்டி சர்வதேச ஊடகமான ஏ.எவ்.பி. செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

இதையடுத்து கோட்டாபய ராஜபக்ஷவும் அவரது மனைவியும் கட்டுநாயக்க சர்வதேச விமான ☞ 11

# கோட்டாவுடன் ரணிலும் பதவி விலக வேண்டும்!

## போராட்டக்குழுவினர் கட்டாய நிபந்தனை; அரசியல் கட்சிகளுடன் நேற்று நேரில் பேச்சு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று பதவி விலகும்போது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பதவி விலக வேண்டும் என்று போராட்டக் குழு வினரால் கட்டாய நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு – காலிமுகத்திடல் போராட்டக்களத்தின் பிரதிநிதிகளுக்கும், அரசியல் கட்சிகள் மற்றும் தொழிற்சங்க உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்றுப் பிற்பகல் சந்திப்பு இடம்பெற்றது. ☞ 2



## ரணில் இராஜிநாமா செய்வது சந்தேகமே!

### அவர் விலகும் நிலையை உடனடியாக ஏற்படுத்த வேண்டும் என போராட்டக்காரர்களுடான சந்திப்பில் சாணக்கியன் வலியுறுத்து



சுமார் முப்பது வருட காலமாக அதிகாரப் பேராசைக்காகக் காத்திருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவி விலகுவார் என்பதை எதிர்பார்க்க முடியாது. ஆகவே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகலுடன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பதவி விலகும் நிலையை உடனடியாக ஏற்படுத்த வேண்டும். அவர் பதில் ☞ 2

## ஏ – 9 வீதியை மறித்து மக்கள் போராட்டம்



(இ.கலையமுதன்)

எரிபொருள் வழங்கக் கோரி ஏ – 9 வீதியை மறித்து யாழ்ப்பாணத்தில் பொதுமக்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்துக்கு அருகில் உள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நீண்ட நாள்களாக எரிபொருளுக்காகக் காத்திருந்தவர்களே ஏ – 9 வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இணைய வழியில் பதிவு செய்பவர்களுக்கே ☞ 2

## கோட்டாவின் விசா கோரிக்கையை அடியோடு நிராகரித்தது அமெரிக்கா

### ‘த இந்து’ பத்திரிகை செய்தி



ஜனாதிபதி கோட்டாபயராஜபக்ஷவின் விசாக் கோரிக்கையை அமெரிக்கா நிராகரித்துள்ளது என இந்தியாவின் ‘த இந்து’ பத்திரிகை நேற்றுப் பிற்பகல் செய்தி ☞ 2

## ரணிலை ஜனாதிபதியாக்க ‘மொட்டு’வில் பலர் தீர்மானம்



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை இடைக்கால ஜனாதிபதியாக நியமிக்க ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பெரும்பாலான உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

அந்தக் கட்சியின் முக்கிய உறுப்பினர் ஒருவர் இந்தத் தகவலை கொழும்பு ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார். ☞ 2

## இலங்கையில் சுமுகமான ஆட்சி மாற்றம் வேண்டும்!

### வலியுறுத்துகின்றது ஐ.நா.



இலங்கையில் சுமுகமான ஆட்சி மாற்றத்தை உறுதி செய்வதற்கும், நாட்டின் ஆழமான பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கும் பேச்சு நடத்த வேண்டும் என்று ஐக்கிய நாடுகளின் பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டரஸ் கோரியுள்ளார்.

இந்தநிலையில், இலங்கையில் ஏற்பட்டுள்ள ☞ 2

## இன்று பதவி விலகாவிடின் நாளை முதல் நாடு முடங்கும்

### ஒன்றிணைந்த தொழிற்சங்கங்கள் கடும் எச்சரிக்கை



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இன்று பதவி விலகாவிடின் நாளை முதல் நாடு தழுவிய ரீதியில் நிர்வாக முடக்கல் நடவடிக்கையில் ஈடுபடுவோம் என்று ஒன்றிணைந்த தொழிற்சங்கங்களின் தலைவர் வசந்த சமரசிங்க கடுமையாக எச்சரித்துள்ளார்.

கொழும்பில் ☞ 2

## கைதான இந்திய மீனவர்கள் 6 பேருக்கும் விளக்கமறியல்



(ந.லோகதயாளன்)

எல்லைதாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் யாழ்.காரைநகர் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 6 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். ☞ 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் நேற்று சபாநாயகருக்கு அனுப்பி வைத்து விட்டார் என்று ஒரு முக்கிய வட்டாரம் தெரிவித்து. எனினும் அந்தக் கடிதம்கிடைக்கப்பெற்றதான அறிவிப்பை சபாநாயகர் நேற்று நள்ளிரவு வரை வெளியிடவில்லை. அதனால் நேற்று நள்ளிரவு வரை கோட்டாபய ராஜபக்ஷவே ஜனாதிபதி என்ற பதவியில் தொடர்கிறார்.

ஜனாதிபதி பதவியில் இருக்கும் ஒரு வரை அவர் விமான நிலையத்தைக் கடந்து செல்லும் போது தடுப்பதற்கான அதிகாரம் எதுவும் குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளுக்கு இல்லை என அந்த அதிகாரிகளின் சங்கம் நேற்றிரவு அறிவித்திருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் நேற்று நள்ளிரவுக்குப் பின்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி என்ற பதவி நிலையோடு நாட்டை விட்டு வெளியேற இருந்தார் என்றும், அதற்கு எந்த எதிர்ப்போ அல்லது ஒத்துழைப்பின்மையோ காட்டப்படக்கூடிய சூழல் குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளின் உயர் மட்டத்தில் இருக்கவில்லை என்றும் நேற்று நள்ளிரவு கிடைத்த செய்திகள் தெரிவித்தன. இன்று விடியும் போது தமது ராஜினாமாக் கடிதத்தை சபாநாயகர் இடம் அனுப்பி வைத்த கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதி என்ற பதவி நிலையோடு நாட்டை விட்டு வெளியேறி இருப்பார் என அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையில் –

காலி முகத்திடல் போராட்ட குழுவினரோடு நேற்று நடைபெற்ற சந்திப்பில் அவர்களின் ஆறு அம்சத் திட்டத்தை அப்படியேதாங்கள்ஏற்றுஅங்கீகரிக்கின்றனர் என்ற சாரப்பட சுமந்திரன் அறிவித்தமை பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

அந்த ஆறு அம்சத் திட்டத்தில் தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது சம்பந்தமாக உருப்படியான எந்த அம்சமும் தெளிவாகக் கோடிகாட்டப்படவில்லை. அப்படி இருக்க இந்தத் திட்டங்களை வரவேற்பதாக சுமந்திரன் எடுத்த எடுப்பில் ஆதரவு தெரிவித்திருக்கின்றமை தமிழ் வட்டாரங்களில் அதிர்ச்சியையும், எரிச்சலையும், அதிருப்தியையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

எனினும், தமிழரை பொறுத்தவரை இரண்டு முக்கிய விடயங்கள் அதில் உள்ளன.

ஒன்று – காணாமல் ஆக்கப்பட்ட, சட்டவிரோதமாகப் படுகொலை செய்யப்பட்ட மக்களின் விடயங்களில் பாதிக்கப்பட்டோருக்கு நீதி கிடைக்கும் திட்டமொன்று முன்னெடுக்கப்பட வேண்டும் என்று அந்த யோசனை திட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

சகல அரசியல் கைதிகளும் உட்பட இப்போது போராட்டத்தில் ஈடுபட்டமைக்காக கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும் என்று அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

உத்தேச புதிய அரசமைப்பில் இனவாதம் முழுதாக களையப்பட்டு, அடக்குமுறை நீக்கப்பட வேண்டும், எல்லா மதங்களும், மொழிகளும், பாலினங்களும் சமத்துவமாக நடத்தப்படும் விதத்திலும் அத்தோடு மக்கள் தமது கலாசார அடையாளங்கள், ஜனநாயக அரசியல் சுதந்திரம் பேணப்படும் விதத்திலும் ஓர் அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கின்றது.

இதனை வேண்டுமானால் தீர்வுக்கான ஒரு வரையறையாக காட்ட முடியுமேதவிர, தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக தெளிவான வரைபாதை ஒன்றும் அதில் இல்லை.

அப்படி இருக்கையில் இத்தகைய யோசனை திட்டத்திற்கு தமிழர் தரப்பு தேடி, வலிந்து போய் ஆதரவு கொடுக்க வேண்டுமா என்ற கேள்வி உயர் தமிழ் வட்டங்களில் அதிகம் அடிபடுகின்றது. இதையொட்டி எழக்கூடிய எதிர்ப்புகளுக்கு விளக்கம் அளிக்க வேண்டிய கடப்பாடு நிச்சயம் சுமந்திரனுக்கு உண்டு. சுமந்திரன் – சாணக்கியன் குழு இந்த விடயத்தில் என்ன நியாயப்பாடுகளை முன் வைக்கப் போகின்றது என்பதை வரும் நாள்களில் நாம் காணலாம் என எதிர்பார்க்கிறேன்.

- மின்னல் -

## ஏ - 9 வீதியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எரிபொருள் வழங்கப்படும் என மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் தெரிவித்தமையால் அங்கு நீண்ட நாள்களாகக் காத்திருந்த பொதுமக்களே வீதியை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் ஏ – 9 வீதி வழியான போக்குவரத்து ஒரு சில மணித்தியாலங்கள் தடைப்பட்டது.

இதையடுத்துஅங்குவந்தபொலிஸார் மற்றும் போராட்டகாரர்கள் யாழ். மாவட்ட செயலருடன் கலந்துரையாடினர்.

காத்திருப்பவர்களுக்கு எரிபொருள் வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டமையையடுத்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கலைந்து சென்றனர்.

## ரணில் இராஜிநாமா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் அவருக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபடுவது சாத்தியமற்றது.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

கொழும்பு – காலிமுகத்திடல் போராட்டக் காரர்களுடன் நேற்று இடம்பெற்ற முக்கிய கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

விசேடமாக போராட்டக்காரர்கள் முன்வைத்துள்ள யோசனையில் முதலாம் (கோட்டபய ராஜபக்ஷ பதவி விலகல்), இரண்டாம் (ரணில் – அமைச்சரவை பதவி விலகல்) யோசனைகளைச் செயற்படுத்தாமல் மூன்று மற்றும் நான்காவது விடயங்களைச் செயற்படுத்த முடியாது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கட்சிக்கு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ள காரணத்தால் எதிர்க்கட்சிக்கு எதனையும் செயற்படுத்த முடியாத நிலையில் போராட்டக்காரர்களின் ஒன்றிணைவால் ஜனாதிபதிக்குப் பதவி விலக நேரிட்டுள்ளது.

கடந்த முப்பது வருடகாலமாக அதிகாரப் போரைக்காகக் காத்திருந்த பிரத மர் ரணில் விக்கிரமசிங்க பதவி விலகுவார் என்பதை எதிர்பார்க்க முடியாது.

ஆகவே, தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டால் நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைய முடியுமா என்பது சந்தேகத்துக்குரியது. ஏனெனில் போராட்டத்தால் லிபியாவில் ஸ்திரமான அரசை உருவாக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, ஜனாதிபதிபதவிவிலகியதைத் தொடர்ந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவி விலகாவிடின் அவர் பதில் ஜனாதிபதியாகப் பதவியேற்பார்; அதனைத் தடுக்க முடியாது.

அவர் பதில் ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர் போராட்டத்தில் ஈடுபடுதற்கு முன்னர், அதனைத் தடுக்கும் வகையில் அனைவரும் ஒன்றுதிரள வேண்டும். ஏனெனில் இவர் வெட்கமற்ற நபர் என்பதை நாடாளுமன்றில் குறிப்பிட்டுள்ளேன்.

இவரது வீடு எரிக்கப்பட்டுள்ளமை கண்டனத்துக்குரியது. இருப்பினும் அந்தச் சம்பவம் சந்தேகத்துக்குரியது. பதில் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றால் ஸ்ரீலங்கா பொதுஜனமுன்னணிக்கும்அதுபிரச்சினையாக அமையும். அரசுக்குள் திருடர்கள் பலர் உள்ளார்கள்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தமது விருப்பத்துக்கமைய ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரைத் தெரிவு செய்யக்கூடும். ஆகவே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகலுடன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பதவி விலகும் நிலையை உடனடியாக ஏற்படுத்த வேண்டும்.

அவர் பதில் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் அவருக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபடுவது சாத்தியமற்றது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைப் பதவி விலக்கும் போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும் – என்றார்.

## ரணிலை ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகினால் எதிர்வரும் 20ஆம் திகதி இடைக்கால ஜனாதிபதிக்கான வாக்கெடுப்புநாடாளுமன்றத்தில்நடைபெறும். இதன்போது ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் பலர் தீர்மானம் எடுத்துள்ளனர்.

எவ்வாறாயினும் கட்சியின் சில உறுப்பினர்கள் மாற்றுத் தீர்மானத்தில் இருக்கின்றனர்எனவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று பதவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தொடர்ந்து பதவி வகிப்பதற்கு எவ்வித தார்மீக உரிமையும் அவர்களுக்குக் கிடையாது எனவும் ஒன்றிணைந்த தொழிற்சங்கங்களின் தலைவர் இதன் போது கூறியுள்ளார்.

## கோட்டாவின் விசா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளியிட்டுள்ளது.

கொழும்பில் உள்ள இராஜதந்திர அதிகாரி ஒருவரிடம் வினவியதையடுத்து, 'த இந்து பத்திரிகை' இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் 4 தடவைகள் ஜனாதிபதி உட்பட 15 பேர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்துநாட்டைவிட்டுவெளியேற முயற்சித்தனர் என்று பிரான்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது. எவ்வாறாயினும், நடைமுறைச் சிக்கல் காரணமாக அந்த முயற்சி தோல்வியடைந்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று பதவி விலகுவார் என சபாநாயகரிடம் ஏற்கனவே அறிவித்திருந்த நிலையில், ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ அறிவிப்புகளை சபாநாயகர் அறிவிப்பார் என ஜனாதிபதி செயலகம் நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தது.

## கோட்டாவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்புப் பொது நூலக கேட்போர் கூடத்தில், இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது, போராட்டக்காரர்களால், போராட்டத்தின் செயற்பாட்டுத் திட்டம் முன்வைக்கப்பட்டிருந்தது. இதில் பல்வேறு கோரிக்கைகளும் நிபந்தனைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதன்படி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று பதவி விலகும்போது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

உடனடியாக இடைக்கால அரசு ஒன்றை நியமித்து, மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த இடைக்கால அரசு ஒரு வருடத்துக்கு மட்டுமே ஆட்சியில் இருக்க முடியும். மேலும், மக்களின் குறுங்கால அடிப்படை பிரச்சினைகளுக்கு 6 மாதங்களுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் ராஜபக்ஷவின் அல்லது ராஜபக்ஷவினரைப் பாதுகாக்க முனைவோருக்கு மீண்டும் பதவிகள் வழங்கப்படக்கூடாது.

தற்போது நடைமுறையில் இருக்கும் அரசு உடனடியாகப் பதவி விலகி இடைக்கால அரசுக்கு வழிவிட வேண்டும்.

போராட்டங்களின்போது கைதானவர்கள் உள்ளிட்ட அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும் போன்ற பல நிபந்தனைகளைப் போராட்டக் குழுவினர் முன்வைத்துள்ளனர்.

## கைதான இந்திய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மீனவர்கள் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் ஜே.கஜநிதிபாலன் முன்னிலையில் நேற்று ஆஜர் படுத்தப்பட்டனர்.

இதன்போது, அவர்களை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

எல்லை தாண்டி காரைநகர் கடற்பரப்பில் மீன்பிடித்துக்கொண்டிருந்த இந்திய மீனவர்கள் 6 பேரும் இழுவைப்படகுடன் கடற்படையினரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டனர்.

மீனவர்கள் நேற்றுக் காலை மயிலிட்டி மீன்பிடித்துறை முகாமிலிருந்து கடற்றொழில் நீரியல் வளத்துறைதிணைக்கள யாழ்ப்பாணம் அலுவலகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

நீரியல் வளத்துறை அலுவலகத்தில் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர், ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாற்றங்களைத் தொடர்ந்தும் ஐ.நா. பொதுச்செயலாளர் நாயகம், உன்னிப்பாக அவதானித்து வருகின்றார் என்று அவர் சார்பாக, பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

ஐ.நா. பொதுச்செயலாளர், இலங்கை மக்களுடன் இணைந்துள்ளார்.

அத்துடன் இலங்கையில் சுமுகமான ஆட்சி மாற்றத்தை உறுதி செய்வதற்கும் பொருளாதார நெருக்கடிக்கு நிலையான தீர்வுகளைக் காண்பதற்கும் பேச்சில் ஈடுபடுமாறு அனைத்துத் தரப்பினருக்கும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

அனைத்து வன்முறைச் செயல்களையும் ஐ.நா. பொதுச்செயலாளர் கண்டிக்கின்றார்.

அமைதியைப் பேணுவதற்குப் பொறுப்பானவர்கள் பொறுப்புக்கூற வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுக் கின்றார்.

இதேவேளை, இலங்கைக்கும் அதன் மக்களுக்கும் ஆதரவளிக்க ஐக்கிய நாடுகள் சபை தயாராக உள்ளது – என்றுள்ளது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழ்ப் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நாடாளுமன்றத்தைக் காப்பாற்றுங்கள்!

**இலங்கைத் தீவு ஒரு விபரீதமான – விநோதமான – விசித்திரமான – ஓர் அரசியல் கால கட்டத்துக்குள் நுழைந்து கொண்டிருக்கின்றது.**

**கடந்த சில நாள்களாகவே அதைப் பற்றித் திரும்பத் திரும்பச் சுட்டிக் காட்டியாயிற்று.**

**மக்கள் திரண்டனர், எதேச்சாதிகார ஆட்சி நடத்திய கோட்டாபய ராஜபக்ஷவைத் துரத்தினர் என்பவை எல்லாம் வாஸ்தவம்தான்.**

**ஆனால் அப்படி எதேச்சாதிகாரியைத் துரத்திய கட்டமைப்புக்கு யார் வழிகாட்டிகள்? ஏதேனும் கட்டுக்கோப்புக்குள் அது இயக்குகின்றதா? அல்லது கோட்டாபய என்ற எதேச்சாதிகாரியை அதிகாரத்தில் இருந்து துரத்துவதுடன் அது அடங்கி விடுமா? அதற்கு அப்பால் அதன் நிகழ்ச்சி நிரல் என்ன? – இப்படி விடை தெரியாத பல கேள்விகளின் பின்புலத்தில் பல மர்மங்கள் புதைந்துள்ளன.**

**இந்த மக்கள் கூட்டத்தை வழி நடத்துகின்றவர்கள் என்று கருதப்படுகின்ற எந்த சக்திகளுடனும் நாடாளுமன்றுக்கு சரியான தொடர்பாடலும் இல்லை, ஊடாட்டமும் இல்லை. இருக்கின்ற நாடாளுமன்றத்தைக் காப்பாற்றி, இனி நடக்கப்போகின்ற அரசியல் மாற்றங்களை சட்ட ரீதியாக முன்னெடுக்க வேண்டும் என்ற இலக்கும் அத்தரப்புக்கு இல்லை.**

**தங்களுக்கு நாடாளுமன்றத்தில் தற்போது பிரதிநிதித்துவமோ, செல்வாக்கோ இல்லாத காரணத்தால் அந்த நாடாளுமன்றம் மீதும் அந்தத் தரப்புகளுக்கு மட்டு மரியாதையும் இல்லை.**

**அதனால், எதேச்சாதிகாரி கோட்டாபயவுக்கு நேர்ந்த கதி நாடாளுமன்றத்துக்கும் ஏற்படுவதை அவை விரும்பும், வரவேற்கும் என்பது தெளிவு.**

**நாட்டைச் சீர்திருத்துவது, அரசமைப்பு மாற்றங்கள் மற்றும் சட்டத் திருத்தம் போன்றவை மூலம் அல்ல, நாடாளுமன்றுக்கு வெளியில் மக்கள் புரட்சி மூலமே என்பது அந்தச் சக்திகளின் கருத்து நிலை.**

**இது புரியாமல் – இத்தரப்புகளின் இந்த நிலைப்பாடு காரணமாக – முழு நாடுமே சேர்ந்தழியப் போகின்றது என்பது விளங்காமல் – காரிய மாற்றிக் கொண்டிருக்கின்றன நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சக்திகளும் கட்சிகளும்.**

**கோட்டாபயவை அதிகாரத்தில் இருந்து துரத்திய சக்திகளுக்கு – மக்கள் போராட்டத்துக்கு – தனித்து உரிமை கோரும் தலைமை இல்லை, அது தான் தோன்றி போல சுயமாக இயங்கியது என்ற கூற்றுகள் எல்லாம் எவ்வளவு சிறப்பானவையோ அது போல அவ்வளவு சிக்கலானவையும் கூட.**

**மக்கள் போராட்டம் என்று கூறப்படும் இந்த எழுச்சியைக் கட்டுப்படுத்தி வழிப்படுத்தும் மீகாமன் யார் என்பது பகிரங்கப்படுத்தப்படாமல், சூட்சுமாக இருக்கும் வரை, அதன் விளைவுகளும் ஆபத்தானவைதான்.**

**இருக்கும் நாடாளுமன்றம் இயன்றவரை ஒன்றுபட்டு தீர்மானங்களை எடுத்து, அவை நாடாளுமன்றத்தில் மிகக் கணிசமான பங்கினருக்கு உடன்பாடான முடிவு என்பதை வெளிப்படுத்தி, பலமாகச் செயற்படா விட்டால், மக்கள் போராட்டத்தின் பின்னால் புதைந்து கிடக்கும் அரூபக் கரங்களால் இந்த நாடாளுமன்றமும் கூடப் பந்தாடப்படலாம்.**

**ராஜபக்ஷவுடன் நின்றவர்களை எல்லாம் தண்டிப்பதாயின், முதலில் கோட்டாபயவுக்கு 69 லட்சம் வாக்குகள் அளித்தவர்களையும், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை வழங்கியவர்களையும்தான் நாம் முதலில் தண்டிக்க வேண்டும் என்பதையும் மறந்து விடக்கூடாது.**

## சிங்கள மக்களினது நோக்கு நிலையில் ராஜபக்ஷக்களை தமிழர் பார்க்கவில்லை!

### நாடுகடந்த தமிழீழ அரசு விளக்கம்

ஸ்ரீலங்காவின் ஆட்சிக்கதிரையில் இருந்த ராஜபக்ஷ தரப்பினருக்கு எதிரான சிங்கள மக்களின் கோபத்துக்கான காரணங்களும், தமிழ்மக்களின் கோபத்துக்கான காரணங்களும் வேறானவை என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியல் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

சிறிலங்காவின் பொருளாதார நெருக்கடி மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினையாக மாறியநிலையில் இதற்கு காரணம் ஆட்சியாளர்களின் பிழையான நிர்வாகம், ஊழல் என்ற கோணத்திலேயே சிங்கள மக்களின் கோபம் கொதித்தெழுந்தது. ஆனால் தமிழ் மக்களின் கோபம் வேறானவை. அதனால்தான் போராட்டத்தில் பங்கெடுக்காது பார்வையாளர்களாக இருந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இதுதொடர்பில் அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சர் சுதன்ராஜ் தெரிவிக்கையில் –

உலகத் தமிழர்களைப் பொறுத்தவரையில் ராஜபக்ஷக்களை இனப்படுகொலையாளிகளாவே பார்க்கின்றனர். 2009 ஆம் தமிழினப்படுகொலையின் வடுக்களும் ஆழ் மனக்கோபமும் மக்களிடம் ஆறாது இன்னமும் இருக்கின்து. அதனால்தான் தென்னிலங்கை மக்கள் கிளர்ச்சியின் காரணமாக ஆட்சியாளர்கள் விரட்டியடிக்கப்பட்ட போது, உலகத்தமிழ்மக்கள் தமது மகிழ்ச்சியை சமூக வலைத்தளங்களில் வெளிப்படுத்தியிருந்தனர்.

ஆனால் தமிழனப்படுகொலைக்கான பொறுப்புக்கூறலுக்கு சிறிலங்கா அரசையே சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்த வேண்டும் என்பதே தமிழர்களின் நிலைப்பாடாக இருக்கின்றது.

இதேவேளை, சிறிலங்கா அதிபர் மாளிகையில் இருந்து போராட்டக்காரர்கள் வழங்கிய பொது அறிவிப்பில், சிறிலங்காவின் பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணிகளில் ஒன்றாக இருக்கின்ற இராணுவச் செலவினங்கள் குறைப்பு பற்றியோ, அதனோடு தொடர்புடையதாகத் தமிழர் பகுதிகளில் இருந்து இராணுவம் விலக்கப்பட வேண்டும் என்பது பற்றியோ பேசவில்லை. இலங்கைத் தீவு முழுவதுக்குமான நிரந்தர அமைதிக்கு தமிழர்களின் இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பது பற்றியோ பேசவில்லை என்பது தமிழ்மக்களிடத்தில் ஏமாற்றத்தையே தந்துள்ளது.

சிங்கள பௌத்த பேரினவாதம் ஊறிப் போயுள்ள சிறிலங்காவின் அரசியல் சமூக நீரோட்டத்தில் ஆக்கபூர்வமான சட்டத்தின் ஆட்சியை வெளிப்படுத்துகின்ற ஓர் அரசியல் மாற்றத்தைக் காணவேண்டும் எனில்,

– ஐ.நா. மனித உரிமைச்சபை அறிவுறுத்தியபடி சர்வதேச சட்டநியமத்தின்படி 'ரோம்' உடன்படிக்கையின் பின்னோக்கியதாக ஒப்பமிடவேண்டும்.

– தமிழர்கள் தமது அரசியல் தலைவிதியைத் தாமே தீர்மானிக்கின்ற வகையில் அதற்கான ஓர் அரசியல் வெளியை வழங்க வேண்டும்.

– மூன்றாவதாக இராணுவச் செலவினங்களின் குறைப்பின் பிரதான பகுதியாகத் தமிழர் தாயகத்தில் இருந்து இராணுவம் நீக்கம் செய்யப்பட வேண்டும்.

இந்த மூன்று விடயங்களுமே தமிழர்களின் இன்றைய நிலைப்பாடு மட்டுமல்ல எதிர்பார்பாகவும் உள்ளது என நாடுகடந்த தமிழீழஅரசாங்கத்தின் அரசியல்விவகாரங்களுக்கான அமைச்சர் சுதன்ராஜ் தெரிவித்துள்ளார்.

## பல்வேறு மோசடிகளுக்கு முடிவு கட்டிய நாளாக ஜூலை 9 ஆம் திகதி இலங்கையில் பதிவானது!

### கிழக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் இரா.துரைரத்தினம் கருத்து



(கல்லடி நிருபர்)

இலங்கை தொடர்பான சம்பந்தப்பட்ட விடயங்களில் ஜூலை 9 ஆம் திகதி இனரீதியான செயற்பாடுகளுக்கும், சர்வதேச ரீதியான தவறான பார்வைகளுக்கும், மனித உரிமை மீறல், ஊழல் மோசடி, மக்களின் நலன்களைப் பாதுகாக்காமை, பன்முகத் தன்மை, பலதரப்பட்ட நல்லாட்சி நடைமுறைகள் காணப்படவில்லை என்பதை 1948 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நிரூபித்த தினமாக 1948 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வரவாற்றில்பதிவானது என முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரத்தினம் தெரிவித்தார்.

இலங்கையின் தற்போதைய நிலைவரம் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் வகையிலான ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

மக்களின் எழுச்சியூடாக கொடுங்கோல் ஆட்சி புரிந்த கோட்டாபய அரசுக்கு நல்ல பாடம் புகட்டப்பட்டிருக்கிறது. உலகளாவிய ரீதியில் மக்கள் தாமாக கிளர்ந்தெழுந்து, எதுவித அரசியல் சாயமும் பூசப்படாத நிலையில் – மூவின மக்களும் ஒன்றிணைந்து கொடுங்கோல் ஆட்சிக்கு முடிவு கட்டியுள்ளனர்.

இந்தத் தினத்தை சர்வதேசம் கூட தலைநிமிர்ந்து பார்க்குமளவுக்கு வழிகோலியது இலங்கை மக்களின் சாத்வீக ரீதியான போராட்டம் எனக் கூறினால் அது மிகையாகாது. அன்றைய தினத்தில் இலங்கையின் முதுகெலும்பாக இருக்கின்ற – ஜனநாயகத்தின் காவலனாக இருக்கின்ற – இலங்கையில் நடக்கின்ற மனித உரிமை மீறல்களை வெளிக் கொண்டு வருகின்ற – சர்வதேசத்தின்பால் பாதுகாப்பு அரணாக விளங்குகின்ற பத்திரிகையாளர்கள் அதுவும் நாட்டின் பிரதமர் அலுவலகத்துக்கு முன்னால் பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அன்றைய தினத்தில் நிகழ்ந்த அந்த சுதந்திரத்துக்கு வழிவகுத்தது ஊடகங்களே எனக் கூறலாம். அந்த ஊடகவியலாளர்களைத் தாக்கியவர்களை அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய அரசாங்கம் அமைக்கப்பட்டு, 24 மணித்தியாலத்துக்குள் கைது செய்வதற்கான நடவடிக்கையை முதலாவதாக எடுக்க வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்.

சபாநாயகர் தலைமையில் சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்பட்டால், அதனை மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய நிலையேற்படும்.

ஒட்டுமொத்தமாக மக்களால் சர்வதேசத்துக்கு ஒருமித்த குரலில் செய்தியொன்று வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. மக்களின் உணர்வை மதித்து நாடாளுமன்ற உறுப்பினர்களை இணைத்துக் கொண்டு, சபாநாயகர் தலைமையில் சர்வகட்சி அரசை செயற்படுத்த வேண்டும்.

இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சர்வகட்சி அரசில் தம்மை இணைத்துக் கொண்டு தமிழ் மக்களுக்கான இனப் பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுக் கொடுக்க கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை உரிய வகையில் செயற்படுத்த முன்வர வேண்டும். – என்றார்.

# ஊடக அடக்கு முறையை கண்டித்து யாழ்.பல்கலை முன்றலில் போராட்டம்









ஊடக அடக்கு முறை , ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதலை கண்டித்து யாழ்.பல்கலைக்கழக முன்றிலில் கண்டன போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக முன்றிலில் நேற்று (செவ்வாய்க்கிழமை) மதியம் 12 மணியளவில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் கலந்துகொண்டு தமது கண்டனங்களைத் தெரிவித்தனர்.

# ரவூப் ஹக்கீமை சந்தித்த அநுர!



தற்போதைய அரசியல் கள நிலைவரத்தையிட்டு, நாடாளுமன்ற உறுப்பினர்களான தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க, அதன் பிரசார செயலாளர் விஜித ஹேரத் ஆகியோர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமின் இல்லத்தில் அவரையும், கட்சியின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பரையும் சந்தித்து, அவசர கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

# ஊழல் மற்றும் வினைத்திறனற்ற ஆட்சிக்கு எதிராக துணிச்சலுடன் போராடிய மக்களை பாராட்டுகிறோம்

## ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நஷனல் அறிக்கை

பல சிரமங்களுக்கு மத்தியில் ஊழல் மற்றும் வினைத் திறனற்ற ஆட்சிக்கு எதிராக மக்களின் இறையாண்மையை நிலைநாட்ட துணிச்சலுடன் போராடிய மக்கள் அனைவரையும் ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா நிறுவனம் பாராட்டுகிறது.

வரலாற்றுச் சிறப்புமிக்கதும் அனைத்து இலங்கையர்களுக்கும், எமது எதிர்கால சந்ததியினருக்கும் சொந்தமான விலைமதிப்பற்ற பொது வளங்களான ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதியின் இல்லம் மற்றும் அலரி மாளிகை என்பவற்றை கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ள ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் நிதானத்துடன் செயற்படுமாறு அந்த நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

காலதாமதமின்றி அமைதியான முறையில் அதிகார பரிமாற்றத்தை உறுதிப்படுத்துமாறு ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு அந்த நிறுவனம் அழைப்பு விடுக்கிறது.

ஜூலை 9 ஆம் திகதி கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறையை வன்மையாகக் கண்டிப்பதுடன், இதன் விளைவாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மற்றும் இராணுவத்தினர் (படையினர்) பலர் காயமடைந்தனர். அதே வேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இல்லத்திற்கு அருகில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பான செய்திகளைச் சேகரித்த நியூஸ் பெஸ்ட் ஊடகத்தின் ஏழு ஊடகவியலாளர்கள் மீது பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட கொடூரமான மற்றும் கோழைத்தனமான தாக்குதலை நிறுவனம் கண்டிக்கிறது. இந்த இக்கட்டான தருணத்தில் உரிய அதிகாரிகள் தாக்குதலுக்கு காரணமானவர்களுக்கு எதிராகவும் ஊடக சுதந்திரத்தைப் பாதுகாக்கவும் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதேபோல் பிரதமரின் இல்லத்தின் மீதான தாக்குதலையும் நாம் கண்டிக்கிறோம். இத்தகைய தீங்கிழைக்கும் செயல்கள் மக்களின் வெற்றிக்கு களங்கத்தையே ஏற்படுத்தும்.

இந்த நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்க பொதுமக்களின் தெளிவான கோரிக்கைகளுக்கு மதிப்பளித்து, நேர்மையான தலைமைத்துவத்துடன் ஒன்றிணைந்து செயற்படுமாறு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பொறுப்பேற்கவிருக்கும் எந்தவொரு வருங்கால நிர்வாகத்தையும் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். மக்கள் கோரும் உண்மையான மாற்றத்தை உருவாக்க உடனடியாக உரிய சீர்திருத்தங்களை மேற்கொள்ளுமாறு மக்கள் பிரதிநிதிகளிடம் கேட்டுக்கொள்கிறோம்.

ஒரு சிவில் சமூகமாக நாமும் நாட்டு மக்களும் அனைத்து கட்டங்களிலும் பொறுப்புக்கூறும் பிரதிநிதித்துவத்தை அவதானத்துடன் கண்காணித்துக் கொண்டிருப்போம். – என்று தெரிவித்துள்ளது.

# அமைதிப்போராட்டக்காரர்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் எதிரான தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகள் அவசியம்!

## ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்து



அமைதியான முறையில் போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட வன்முறைத் தாக்குதல்கள் தொடர்பில் உரியவாறான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியம் என்று வலியுறுத்தியிருக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் – ஹம்டி, இலங்கையில் மனித உரிமைகள், சட்டத்தின் ஆட்சி மற்றும் ஜனநாயக நிர்வாகம் ஆகியவற்றுக்கு மதிப்பளிக்கப்படவேண்டும் என்றும் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைப் பதவி விலகுமாறு வலியுறுத்தி கடந்த சனிக்கிழமை நாடளாவிய ரீதியில் பெருமளவான மக்கள் ஒன்றிணைந்து முன்னெடுத்த போராட்டம் சர்வதேச ரீதியில் கவனத்தைப் பெற்றிருக்கும் நிலையில், அதுதொடர்பாக வெளியிட்டிருக்கும் அறிக்கையிலேயே ஐ.நாவின் இலங்கைக்கான நிரந்தர வதிவிடப்பிரதிநிதி ஹனா சிங்கள் – ஹம்பி மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் கூறியிருப்பவை வருமாறு –

தமது தலைவர்களிடம் ஜனநாயகம், பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றைக் கோருகின்ற இலங்கை மக்களுக்கு நாம் எமது ஆதரவை வெளிப்படுத்துகின்றோம்.

ஊடகவியலாளர்கள் மற்றும் அமைதியான முறையில் போராட்டங்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் உரியவாறான விசாரணைகளை முன்னெடுப்பதும், அச்சம்பவங்களுக்குப் பொறுப்பானவர்களை சட்டத்தின்முன் நிறுத்த வேண்டியதும் அவசியமாகும்.

இலங்கை தற்போது முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இதனை உரியவாறு கையாள்வதுடன், இதற்குத் தீர்வுகாண்பதை முன்னிறுத்தி சம்பந்தப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச தரப்பினருடன் செயற்திறன்மிக்க பேச்சுகளைத் தொடரக்கூடிய சட்டபூர்வமான சீரான அரசாங்கமொன்றை நிறுவ வேண்டிய தேவை காணப்படுகின்றது. உணவுப்பாதுகாப்பு, விவசாயம், வாழ்வாதாரம் மற்றும் பின்தங்கிய சமூகப்பிரிவினருக்கு அவசியமான சுகாதாரசேவைக் கிடைப்பனவு ஆகிய விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும் என்பதுடன் அவற்றை உறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கையில் தற்போதைய நிலைவரம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை உன்னிப்பாக அவதானம் செலுத்திவருவதுடன், அவசியமான உதவிகள் தொடர்பில் பேச்சுகளை நடத்துவதற்கும் தயாராக இருக்கின்றோம். அதுமாத்திரமன்றி நாம் உலகநாடுகளை வலியுறுத்துவதைப்போன்று மனித உரிமைகள், சட்டத்தின் ஆட்சி மற்றும் ஜனநாயக நிர்வாகம் ஆகியவற்றுக்கு மதிப்பளிக்குமாறு இலங்கையையும் வலியுறுத்துகின்றோம் என்று அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# பஸிலின் அரசியல் சூதாட்டத்தை நிறுத்த வேண்டும் தவறின் இலங்கையில் இரத்தக் களரி ஏற்படலாம்!

## உலப்பனே சுமங்கள தேரர் எச்சரிக்கை



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உடனடியாக ஆட்சி அதிகார பலத்தில் இருந்து விலகி, சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபிக்க இடமளிக்க வேண்டும் என்று உலப்பனே சுமங்கள தேரர் தெரிவித்துள்ளார்.

கண்டியில் அஸ்கிரிய மாநாயக்க தேரரை சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

பஸில் அரசியல் தந்திரங்கள் மூலம் அதிகாரத்தைப் பெற முயற்சிக்கக்கூடாது.

அரசியல் தந்திரங்கள் மூலம் பொதுஜன பெரமுனவிடம் தொடர்ந்தும் அதிகாரத்தை வைத்துக்கொள்ள முயற்சிக்க வேண்டாம். தொடர்ந்தும் இப்படி செய்தால், நாட்டில் இரத்த களரி ஏற்படும்.

இதனால், ஆட்சி அதிகாரத்தைக் கையில் வைத்திருக்க முயற்சிக்கும் இரட்டை குடியுரிமை பெற்ற நபருக்கு(பஸில் ராஜபக்ஷ) அரசியல் சூதாட்டத்தை நிறுத்துங்கள் எனக்கூறிக்கொள்கிறோம்.

விரட்டியடிக்கப்பட்ட சகாக்களைக் கொண்டு சர்வகட்சி அரசாங்கத்தை ஆட்டுவிக்க முயற்சிக்க வேண்டாம். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு தற்போது மக்கள் ஆதரவு இல்லை.

இதனால், அவர்கள் ஆட்சி அதிகார பலத்தில் இருந்து உடனடியாக விலகி, சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தொடர்ந்தும் பஸில் ராஜபக்ஷ உட்பட ராஜபக்ஷவினரின் அடிமையாக இருக்காது நாட்டுக்காக சுதந்திரமாக செயற்படுமாறு கட்சித் தலைவர்களிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

அப்படியில்லை என்றால், எமக்கு அடுத்த தேர்தல் நடத்தப்படும் வரை காத்திருக்க முடியாது. நாங்கள் பொது மக்களின் பலத்தை அன்று கொழும்பில் காட்டினோம்.

இதற்கு அப்பால் சென்று எமது பலத்தைக் காட்டத் தயங்க மாட்டோம் என்பதை குறிப்பாக பஸில் ராஜபக்ஷவுக்கு கூறிவைக்க விரும்புகிறோம் என சுமங்கள தேரர் கூறியுள்ளார்.

## திங்கள் நள்ளிரவு முதல் வி.ஐ.பி. டெர்மினல் சேவையில் இருந்து அதிகாரிகள் விலகினர்

தொழிற்சங்க நடவடிக்கையின் ஒரு பகுதியாக விமான நிலையத்தில் உள்ள வி.ஐ.பி. டெர்மினல் முனையத்தின் குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகள் சேவையில் இருந்து விலகியுள்ளனர்.

திங்கள் நள்ளிரவு முதல் மறு அறிவித்தல் வரை சேவையில் இருந்து விலக தீர்மானித்துள்ளன என குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.

நிலவும் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிக்கு காரணமான முன்னாள் அரசியல்வாதிகள் வி.ஐ.பி. டெர்மினல் ஊடாக நாட்டை விட்டு வெளியேறுவார்கள் என ஊகிக்கப்படுகின்றது.

இந்நிலையில் அவர்கள் நாட்டை விட்டு வெளியேற முயற்சிப்பதைத் தடுக்கும் வகையில் அவர்கள் கடமைகளில் இருந்து விலகுவதற்கு தீர்மானித்தனர் என அந்தச் சங்கத்தின் தலைவர் குறிப்பிட்டார்.

## யூரியா உரம் விநியோகம்!

### விவசாய அமைச்சு தகவல்

இந்திய கடன் வசதியின் ஒரு பகுதியாக இலங்கைக்கு வழங்கப்பட்ட யூரியா உரம் செவ்வாய்க்கிழமை முதல் விநியோகிக்கப்படுகிறது என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த உரம் கொழும்பு துறைமுகத்தில் இருந்து விடுவிக்கப்பட்டதாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உரத்தின் தரம் தொடர்பாக மூன்று வெளி நாட்டு ஆய்வகங்களில் இருந்து இரசாயன அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

உரத்தில் பையூரெட் அளவு ஒரு வீதத்துக்கும் குறைவாக இருப்பதாக விவசாய அமைச்சின் அறிக்கைகள் உறுதிப்படுத்தின. தேசிய உரச் செயலகத்திடம் இருந்து தரச் சான்றிதழும் பெறப்பட்டதாக விவசாய அமைச்சு தெரிவித் துள்ளது. இந் நிலை யில் ஜி.பி.எஸ். தொழில்நுட்பம் மூலம் கண்காணிக்கப்படும் லொறிகள் மூலம் உரம் விநியோகிக்கப்படும் என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

## இ.போ.சபை பஸ் மீது வவுனியாவில் கல் வீச்சு!

### யுவதி கைது

வவுனியா புளியங்குளம் பகுதியில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் மீது கல் வீச்சு மேற்கொண்ட குற்றத்துக்காக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளார்

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கி சென்ற இ.போ.ச. பஸ், புளியங்குளம் பகுதியில் வழிமறித்த யுவதி பஸ் நிறுத்தப்படாததையடுத்து ஆத்திரமடைந்து, பஸ் மீது கல் வீச்சு மேற்கொண்டுள்ளார். இதனால் பஸ்ஸின் கண்ணாடி நொறுங்கியுள்ளது.

இதையடுத்து பஸ்ஸின் சாரதி மேற்கொண்ட முறைப்பாட்டினடிப்படையில் விசாரணை மேற்கொண்ட பொலிஸார் புளியங்குளம் ஸ்ரீ முத்துமாரி நகரில் வசிக்கும் 28 வயது பெண் ஒருவரை கைது செய்து மேலதிக விசாரணைகளின் பின்னர் நேற்று நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கைகள் இடம்பெற்றன என மேலும் தெரிவித்தனர்.



## உடனடியாக அதிகாரங்களை ரணில் பயன்படுத்த வேண்டும்!

### கோருகின்றார் டக்ளஸ்

நிலைமைகள் மேலும் மோசமடைவதைத் தடுக்கும் வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தனக்கிருக்கின்ற அதிகாரங்களை பயன்படுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

அமைச்சரவை கூட்டம் நடைபெறாத நிலையில் இறக்குமதி செய்யப்படும் எரிபொருளுக்கான கொடுப்பனவுகள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ள முடியாமல் இருக்கின்றமை தொடர்பாக, சபாநாயகர் தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா–

ஏற்கனவே எரிபொருளுக்காக மக்கள் நாள் கணக்கில் வீதியில் நிற்கின்ற நிலையில், கிடைக்கின்ற எரிபொருளையும் தாமதப்படுத்தும் வகையில் செயற்பாடுகள் அமையுமாயின், மின்வெட்டு உட்பட பல மோசமான விளைவுகளை நாடு எதிர்கொள்ள நேரிடும்.

தற்போதைய நிலையில் நாட்டின் நலன் கருதி அமைச்சரவையின் ஒத்துழைப்புடன், பிரதமர் விடயங்களைக் கையாள வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

# அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தாமல் எந்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாணமுடியாது!

### சுசில் பிரேமஜயந்த சுட்டிக்காட்டு



சர்வக்கட்சி தலைமையிலான அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்கு சகல அரசியல் கட்சிகளும் பொது இணக்கப்பாட்டுடன் ஒன்றிணைய வேண்டும். சமூக கட்டமைப்பில் காணப்படும் அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கம் அரசியல் கட்சிகளுக்கிடையில் இல்லை என்பது தெளிவாகுகிறது.

அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தாமல் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காண முடியாது என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்–

சர்வகட்சி தலைமையிலான அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்கு இடமளித்து அமைச்சு பதவிகளில் இருந்து விலகத் தயார் என்பதை அறிவித்துள்ளோம். நாடு வரலாற்றில் என்றுமில்லாதவாறு அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடியைத் தற்போது எதிர்கொண்டுள்ளது.

சர்வகட்சி தலைமையிலான அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்கு சகல அரசியல் கட்சிகளும் பொது கொள்கைக்கமைய இணக்கப்பாட்டுடன் ஒன்றிணைய வேண்டும்.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் அரசியல் கட்சிகள் தங்களின் கட்சி கொள்கையை அடிப்படையாகக் கொண்டு செயற்படுகின்றனவே தவிர பொது கொள்கைக்கமைய செயற்படுவதில்லை.

சமூக கட்டமைப்பில் காணப்படும் பிரச்சினை நாளுக்கு நாள் தீவிரமடைகிறது. அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கம் அரசியல் கட்சிகள் மத்தியில் இல்லை என்பது மாத்திரம் தெளிவாகுகிறது. நிறைவேற்றுத்துறையின் அதிகாரத்தை நாட்டு மக்கள் முழுமையாகக் கேள்விக்குள்ளாக்கியுள்ளார்கள்.

அரசமைப்பின் பிரகாரம் நாடாளுமன்றின் ஊடாக அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமா என்பது சந்தேகத்துக்குரியதாக உள்ளது. நாடாளுமன்றில் இடம்பெறும் வாதப்பிரதிவாதங்கள் மீது மக்கள் கவனம் செலுத்துவதில்லை. நாடாளுமன்றம் கூடுவதற்கு முன்னர் அரசியல் கட்சிகள் ஒருமித்த கொள்கையில் ஒரு தீர்மானத்தை முன்னெடுக்க வேண்டும்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் தன்னிச்சையான முறையில் செயற்பட்டதன் விளைவை முழு நாடும் தற்போது எதிர்கொள்கிறது. மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் முழுமையாக இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. – என்றார்.



# யாழ். பல்கலை முகாமைத்துவ கற்கை வணிகபீடம் அறிவியல் துறைக்கான பங்களிப்பின் ஓர் அங்கம்!




திருமூலரால் சிவபூமி என அழைக்கப்பெற்ற திருமிகு வள நாட்டின் சிரசாம் யாழ்ப்பாணத்தில், நஞ்சையோடு புஞ்சையுமாய் நல் நிலங்களையும் வருடமெல்லாம் நீரை குறைவின்றி வழங்கும் நீர்ச் சுணைகளையும் இயல்பாய் – இயற்கையாய்கொண்டமைந்ததிருநெல்வேலியில் நவீன உலகில் பல்கலைக்கழகங்களின் தோற்றத்துக்கு முன்னரே ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட குருகுல கல்வி அமைப்புகள் ஊடாக எம்மவர்கள் அறிவியல் உலகுக்கு அறிவையும், அறத்தையும் போதித்தார்கள். அந்தவகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 'மெய்பொருள் காண்பது அறிவு' என்ற மகுட வாசகத்துக்கு உயிர் கொடுக்குமுகமாக அறிவுசார் சேவைகளை இந்த உலகுக்கு வழங்கி வருகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் காணப்படுகின்ற பீடங்களில் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம் முதன்மையானதாகவும், தனித்துவமானதாகவும் மிளிர்கின்றது.

இந்தப் பீடம், முகாமைத்துவம் மற்றும் வணிக துறைசார் கற்பித்தல், கற்றல், ஆய்வு மற்றும் புலமைப் பரிசிலில் சிறந்து விளங்கும் ஒரு முன்னணி மையமாக விளங்க வேண்டும் என்ற தூர நோக்குக்கு அமைவாகத் தனது சேவை வழங்கல் செயற்பாட்டைக் கற்பித்தல் செயற்பாடுகளுடன் மட்டுப்படுத்திக் கொள்ளாது, ஆய்விலும் ஏனைய கல்வி சார் மற்றும் கல்வி சாரா சேவை வழங்குவதிலும் ஈடுபடுகின்றது.

முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம் அறிவியல் துறைக்கான ஒரு பங்களிப்பின் ஓர் அங்கமாக 2014 ஆம் ஆண்டிலிருந்து 'சமகால முகாமைத்துவ பற்றிய சர்வதேச மாநாடு (International Conference on Contemporary Management ICCM)" என்ற தொனிப் பொருளில் வருடாந்தம் ஆய்வு மாநாடுகளை நடத்தி வருகின்றது. அந்த வகையில் முதலாவது சர்வதேச ஆய்வு மாநாடு 2014ஆம் ஆண்டு 'நிலைபேண் வளர்ச்சியினை நோக்கி மக்களுக்கான வலுவூட்டல் (Empowering People towards Sustainable Development)" என்ற தொனிப் பொருளிலும், 2015ஆம் ஆண்டு 'புதியன புனைதல் மற்றும் அறிவுப் பரப்புகளின் மூலமாக உற்பத்தியினை தூண்டுதல் (Driving Productivity through Knowledge & Innovation)"என்ற தொனிப் பொருளிலும், 2016ஆம் ஆண்டு 'சமகால சிக்கல்களுக்கான முக்கியமான தீர்வுகள் (Critical Solutions for Contemporary Issues)" என்ற தொனிப் பொருளிலும் இடம்பெற்றது.

2017 ஆம் ஆண்டு 'சவால்களுக்கு அப்பால் நிலைபேண் தன்மைக்கான ஊக்கமளிக்கும் உறுதிமொழிகள் (Inspiring Pledge for Sustainability Over Challenges)" என்ற தொனிப்பொருளிலும், 2019ஆம் ஆண்டு 'சிறந்த எதிர்காலத்தை நோக்கி மனித மூலதனத்தை மறுவடிவமைத்தல் (Reshaping Human Capital towards Better future)" என்ற தொனிப் பொருளிலும் இடம்பெற்றது.

2019ஆம் ஆண்டு நிகழ்நிலைத் தொழில் நுட்பத்தின் உதவியுடன் ஆறாவது ஆய்வு மாநாடு 'பொருளாதார மீள் தன்மை நோக்கி நிலைபேண் வளர்ச்சிக்கான சிக்கல்கள் மற்றும் சவால்களைத் தீர்ப்பதற்கான தீர்மானங்களை அபிவிருத்தி செய்தல்' (Issues and Challenges of Sustainable Development Fostering Resolutions towards Economic Resilience)" என்ற தொனிப் பொருளில் உலகப் புகழ் பெற்ற அறிவியல் மேதைகளான பேராசிரியர் கேறி டெஸ்லர், ஏ.பரசுராமன் மற்றும் பேராசிரியர் ஐ.எம். பண்டி போன்றவர்களின் முக்கிய உரைகளுடன் இடம்பெற்றது.

ஏழாவது மாநாடு 'புதிய இயல்பில் மீள்தன்மைக்காக வணிகத்தை மாற்றுதல் (Transforming Business for Resilience in New Normal)"என்ற தொனிப் பொருளில் நாளை (வியாழக்கிழமை) 14ஆம் திகதி முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தில் அமைந்துள்ள கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இதன் நேரலை நிகழ்வுகள் http://iccm.maco.jfn.ac.lk என்ற தளத்தினூடாக பகிரப்படவுள்ளன.

இந்த ஆய்வு மாநாட்டில் அவுஸ்திரேலியாவின் சதேர்ண் குறொஸ் பல்கலைக்கழகத்தின் Southern Cross University தகவல் அமைப்புகள் முறையின் புகழ் பூத்த பேராசிரியர் தர்சனா செடொரவின் முதன்மை உரை அவுஸ்திரேலியாவிலிருந்து நிகழ்நிலை வாயிலாக இடம்பெறவுள்ளது.

இந்த ஆய்வு மாநாட்டில் கணக்கியல் மற்றும் நிதி, சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகச் சங்கிலி, முயற்சியாண்மையும் புதியன புனைதலும், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல், மனித வள முகாமைத்துவம் மற்றும் நிறுவன கற்கைகள், கற்றல் கலாசாரம் மற்றும் சமூகம் ஆகிய 07 உப பிரிவுகளின் கீழ் 43 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. இவற்றுடன், மாணவர்களின் அறிவு மற்றும் ஆய்வுத் திறனை மேம்படுத்தும் நோக்கில் மாணவர் ஆய்வு மாநாடும் (Student Research Symposium)ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது. அதற்காக 6 ஆய்வு கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இந்த மாநாட்டில் சமர்ப்பிக்கப்படுகின்ற ஆய்வுகளின் முடிவுகள் நலிந்து போயுள்ள வணிக சமூகத்தின் இயலுமையைக் கட்டி எழுப்ப வகை செய்வதுடன் தொடர்ந்தும்யாழ்ப்பாணபல்கலைக்கழகமும், முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடமும் ஆய்வுகள் மூலமாகவும் பிராந்திய நாட்டின் பொருளாதார மற்றும் வணிக மறுமலர்ச்சிக்கு பங்களிப்பு செய்யும் என்பதில் ஐயமில்லை.

இம் மாநாட்டுக்கு எமேரல்ட் பதிப்பகம் (Emerald Publishing) கல்விசார் பங்காளியாகவும், இலங்கை வங்கியாளர்கள் நிறுவனம் (Institute of Bankers of Sri Lanka), இலங்கை பட்டய நிதி பகுப்பாய்வாளர் சமூகம் (CFA Society Sri Lanka), இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம் (Sri Lanka Institute of Marketing), பட்டயக் கணக்காளர் நிறுவனம் (Charted Accountants of Sri Lanka), பட்டய சான்றளிக்கப்பட்ட கணக்காளர்கள் சங்கம் (Association of Charted Certified Accountants) ஆகியன தொழில்முறை பங்காளர்களாகவும் அனுசரணை வழங்குகின்றன.

# ஜனாதிபதி, பிரதமர் பதவி விலகாவிடின் நாளை நாடு தழுவிய ரீதியில் ஹர்த்தால்

## ஒன்றிணைந்த தொழிற்சங்கம் மீள வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 13

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று (புதன்கிழமை) பதவி விலகாவிடின் நாளை (வியாழக்கிழமை) முதல் நாடு தழுவிய ரீதியில் ஹர்த்தால் நடவடிக்கையில் ஈடுபடுவோம்.

நாட்டு மக்களின் அபிலாஷைகளுக்கு மதிப்பளித்து அரச தலைவர்கள் இருவரும் பதவி விலக வேண்டும் என ஒன்றிணைந்த தொழிற்சங்கத்தின் தலைவர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக் கிரமசிங்க ஆகியோர் தொடர்ந்து பதவி வகிப்பதற்கு எவ்வித தார்மீக உரிமையும் அவர்களுக்குக் கிடையாது.

இலங்கை அரசியல் வரலாற்றில் எந்த அரச தலைவரையும் நாட்டு மக்கள் இந்தளவிற்கு வெறுக்கவில்லை. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை மக்கள் கடுமையாக விமர்சிக்கிறார்கள்.

நாட்டு மக்கள் ஒன்றிணைந்து பதவி விலகுமாறு வலியுறுத்தும் போது ஜனாதிபதி பதவி விலகலுக்காக சுபவேளை பார்த்துக்கொண்டிருக்கிறார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் பதவி விலக வேண்டும். பதவி விலகாவிடின் வியாழக்கிழமை முதல் நாடு தழுவிய ரீதியில் பாரிய ஹர்த்தால் நடவடிக்கையில் ஈடுபடுவோம்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியவுடன், பதில் ஜனாதிபதியாகலாம் என முன்னெடுக்கும் அரச சூழ்ச்சியை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கைவிட வேண்டும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு மக்களாணை கிடையாது. மக்களின் அபிலாஷைக்கு மதிப்பளித்து பதவி விலக வேண்டும்.

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் பதவி விலகாமல் அரசியல் சூழ்ச்சியை முன்னெடுத்தால் மேலும் பாரதூரமான விளைவுகளை இருவரும் எதிர்கொள்ள நேரிடும்.

ஜனாதிபதி பதவி விலகலை உத்தியோகபூர்வமாக அறிவித்து, அதற்கான கடிதத்தை சபாநாயகருக்கு அறிவித்து, சபாநாயகர் அதனை நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்தும் வரை ஜனாதிபதியின் பதவி விலகல் மீது நம்பிக்கை கொள்ள முடியாது. – என்றார்.

# அதர்மம் அழிந்து ஜனநாயகம் வெற்றி பெற்றிருக்கிறது இதேபோல் தமிழர்களின் குரலுக்கு நீதி கிடைக்குமா?

## காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் கேள்வி



(காரைதீவு நிருபர் சகா)

இன்றைய இறுக்கமான காலகட்டத்தில் ஜனநாயகம் வெற்றி பெற்றிருக்கின்றது . ஆம், அநியாயம், அடாவடித்தனம், அதர்மம், அயோக்கியத்தனம் அழிந்திருக்கின்றது. பாராட்டுகின்றோம், வாழ்த்துகின்றோம். அதேவேளை, இதே நாட்டில் பிறந்து பல்வேறு சொல்லொணா துன்பதுயரங்களை அனுபவித்த தமிழர்களின் நீண்ட கால உரிமைக் குரலுக்கு நீதி கிடைக்குமா?

– இவ்வாறு காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாட்டின் சமகால அரசியல் நிலைமை தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

நாங்கள் எங்களுடைய இன விடுதலைக்காகவும், நில விடுதலைக்காகவும் ஜனநாயக ரீதியாக இன்றும் போராடிக் கொண்டிருக்கின்றோம்.

எமது இந்த அவல குரலும், இந்த கூக்குரலும் வருகின்ற அரசாங்கத்துக்காவது கேட்குமா? என்கின்ற கேள்வி எங்களிடம் எழும்புகின்றது.

உங்களுடைய ஜனநாயகப் போராட்டத்துக்கு நாங்கள் முழு ஆதரவையும் தந்திருக்கின்றோம். தொடர்ச்சியாக நாங்கள் பெரும்பான்மை இனத்தவர்களோடு வாழத் தயாராக இருக்கின்றோம்.

நாங்கள் தனி நாடு அல்லது இலங்கை ஆட்சி செய்ய வேண்டும் என்று நாங்கள் ஒருபோதும் கூறவில்லை.

இந்த நாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்கள் சுய உரிமையோடு சுதந்திரமாக வாழ வேண்டும். இங்கு கல்வி கற்று படிக்கின்ற ஒவ்வொரு இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் வேலை வாய்ப்பு உட்பட அனைத்திலும் இனிவரும் காலங்களிலாவது புறக்கணிப்பில்லாமல் எங்களை ஏனைய மனிதர்கள் போன்று நடத்திக் கொள்ளக்கூடிய ஓர் அரசாங்கம் அமைய வேண்டும் என்பதே எங்களுடைய எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

இலங்கையில் வாழ்கின்ற மூவின மக்களும் பொருளாதார நெருக்கடியை உருவாக்கி தூரநோக்கு இல்லாத சிந்தனையில் செயற்பட்ட அரசாங்கத்தை அண்மைய போராட்டம் வீட்டுக்கு அனுப்பி இருக்கின்றது.

ஜனநாயக ரீதியான போராட்டத்தைக் கடந்த பல வருட காலங்களாகத் தமிழ் மக்கள் அறவழியில் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். இதே பொருளாதார நெருக்கடி, இதே எரிபொருள் தட்டுப்பாடு ,உணவு தட்டுப்பாடு இவ்வாறான தட்டுப்பாடுகளோடு பல ஜனநாயக போராட்டங்களை போராடிக் கொண்டு பல உயிர்த்தியாகங்கள் உடைமை தியாகங்கள் பல பொருள்கள் உடைமைகள் அனைத்தும் இழந்த நிலையில் பல வருட காலமாக அல்லல்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

இந்த இலங்கைத் திருநாட்டில் நாங்களும் சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதற்காக பல அரசியல் தலைவர்களையும் சந்தித்து ஐக்கிய நாடுகளுக்கும் பல விடயங்களை கொண்டு சென்றிருக்கின்றோம்..

இன்று நம் இனத்தவரின் மீது இரக்கம் காட்டாமல் இருப்பது ஏன் ?

இனி வருகின்ற அரசாங்கம் அல்லது அரசியல் பிரமுகர்கள் தமிழர்கள் மீது இரக்கம் காட்டுவார்களா?

நாங்களும் இந்த நாட்டில் பிறந்த மக்கள் என்பதை ஏற்பார்களா? அல்லது இந்த ஜனாதிபதி தெரிவாகி வந்த உடனே சிறுபான்மை இனத்தவர்கள் உங்களுடைய வாக்குபலமோ அல்லது அவர்களுடைய அங்கத்துவமோ எங்களுக்குத் தேவை இல்லை என்று சொன்னதைப் போன்று, தலைகுத்துக்கரணம் அடிப்பார்களா என்று தெரியவில்லை.

இந்த நாட்டிலே குறிப்பாக பெரும்பான்மை இனத்தவர்மூலம் சாதித்துக்காட்டலாம் என்று பல விடயங்களைத் தவறாக அவர் கூறினார்

சாணக்கிய தலைமைகள் அன்றே சொன்னது ‘சிங்கள மக்களே சிங்கள இனவாதிகளுக்கு எதிராக இந்த அரசாங்கத்திற்கு எதிராக ஒரு நாள் வீதிக்கு வந்து போராடத் தொடங்குவார்கள் ’ – என்று சொன்ன வார்த்தை இன்று நடந்தேறி இருக்கின்றது.

# ராஜபக்ஷக்களை அழைக்க இந்தியாவிலிருந்து குழு வந்தால் போக்குவரத்துக்கான செலவை இலங்கை மக்கள் வழங்குவர்!

## சுப்ரமணியன் சுவாமியின் கருத்துக்கு பிமல் கிண்டலாகப் பதில்



கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய இருவரும் சுயாதீனமாக நடத்தப்பட்ட தேர்தலொன்றில் அறுதிப்பெரும்பான்மை வாக்குகள் மூலம் தெரிவுசெய்யப்பட்டவர்களாவர். எனவே தற்போது ராஜபக்ஷக்களுக்கு இந்தியாவின் இராணுவ உதவி தேவைப்படுமேயானால், தாம் அதனை வழங்கவேண்டும் என்று பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும் மாநிலங்களவை உறுப்பினருமான சுப்ரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார்.

அதற்குப் பதிலளித்துள்ள மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க, அவ்வாறு அனுப்பிவைக்கப்படும் குழு ராஜபக்ஷக்களை இந்தியாவிற்கு அழைத்துச்செல்வதற்கு வருவார்களேயானால், அதற்குரிய செலவுகளைச் செலுத்துவதற்கு இலங்கை மக்கள் தயாராக இருக்கின்றார்கள் என்றும், ஆனால் அதன்பின்னர் இந்தியாவின் நிதிநிலைவரம் தொடர்பாகக் கவனமாக இருக்க வேண்டும் என்றும் எள்ளிநகையாடல் தொனியில் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் நீண்டகால நண்பரான சுப்ரமணியன் சுவாமி, கடந்த காலங்களில் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்துக்கும் அதன் செயற்பாடுகளுக்கும் ஆதரவாகக் கருத்து வெளியிட்டு வந்தவர்களில் ஒருவராவார். அந்தவகையில் இலங்கையில் தற்போதைய நிலைவரம் குறித்து தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அப்பதிவில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:

“கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய இருவரும் சுயாதீனமாக நடத்தப்பட்ட தேர்தலொன்றில் அறுதிப்பெரும்பான்மை வாக்குகள் மூலம் தெரிவுசெய்யப்பட்டவர்களாவர். எனவே அத்தகைய சட்டபூர்வ தேர்தலின் மூலமான தீர்மானத்தைப் புறக்கணிப்பதற்கு இந்தியா எவ்வாறு இடமளிக்கமுடியும்? அவ்வாறெனில் எமக்கு அண்மையிலுள்ள எந்தவொரு ஜனநாயக நாடும் பாதுகாப்பாக இருக்கமுடியாது. எனவே, ராஜபக்ஷக்களுக்கு இந்தியாவின் இராணுவ உதவி தேவைப்படுமேயானால், நாம் அதனை வழங்க வேண்டும்” என்று அவர் அந்தப் பதிவில் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, சுப்ரமணியன் சுவாமியின் இந்தக் கருத்து தொடர்பில் இலங்கை மற்றும் இந்தியாவைச் சேர்ந்த டுவிட்டர் பயனாளர்கள் பலர் கடுமையான விமர்சனங்களை வெளியிட்டிருப்பதுடன், அவரது கருத்துக்குத் தமது அதிருப்தியையும் வெளிக்காட்டியுள்ளனர்.

# டுபாய்க்கான விமானங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தம்!

இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை காரணமாக ஐக்கிய அரபு இராச்சியத்தின் பிளேய் டுபாய் நிறுவனம் இலங்கைக்கான விமான சேவைகளை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது.

டுபாய்க்கும் கொழும்புக்கும் இடையிலான விமான சேவைகள் ஜூலை 10 ஆம் திகதி முதல் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளன என அந்த நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவரை மேற்கோள்காட்டி வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இரத்து செய்யப்பட்ட விமானங்களின் பற்றுச்சீட்டு மற்றும் பணம் என்பன பயணிகளுக்கு திரும்ப வழங்கப்படும் என்றும் சம்பந்தப்பட்ட நிறுவனம் உறுதி செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சஜித்தை தவிர வேறு எவரையும் பிரதமராக மக்கள் ஏற்கார்கள்!

## அடித்துக் கூறுகிறார் எஸ்.எம்.மரிக்கார்



சர்வகட்சி அரசாங்கத்தின் பிரதமராக பொதுஜன பெரமுன உறுப்பினர் நியமிக்கப்பட்டால் நாட்டு மக்கள் அதனை அங்கீகரிக்க மாட்டார்கள்.

சர்வதேசமும் அதனை வரவேற்காது. எனவே அடுத்த பிரதமராக சஜித் பிரேமதாஸவையே நியமிக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவுள்ளது. அதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மாத்திரமின்றி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பதவி விலக வேண்டும்.

மக்கள் ஆணையை ஏற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக இணக்கம் தெரிவித்துள்ள போதிலும், அவரால் நியமிக்கப்பட்ட பிரதமர் பதவி விலக மறுப்பது பொருத்தமற்றது.

காரணம் அவர் மக்களால் நிராகரிக்கப்பட்ட தலைவர் ஆவார். நாட்டை ஸ்திரமற்றதாக்க இடமளிக்க முடியாது எனத் தெரிவித்து, அதனைக் காரணமாகக் காண்பித்து பிரதமர் பதவி விலக மறுக்கின்றார்.

நாடு இப்போதும் ஸ்திரமற்ற நிலையிலேயே உள்ளது என்பது அனைவரும் அறிந்த விடயமாகும். ஒரு நாளாவது ஜனாதிபதியாகப் பதவி வகிக்க வேண்டும் என்ற ஆசையிலேயே அவர் இவ்வாறு கூறுகின்றார்.

எனவே இவ்வாறான ஏமாற்றுக்கதைகள் கூறுவதைத் தவிர்த்து பிரதமர் உடனடியாகப் பதவி விலக வேண்டும். அதன் பின்னர் புதிய ஜனாதிபதியையும், பிரதமரையும் தெரிவு செய்து சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க முடியும்.

சர்வகட்சி அரசாங்கத்தின் பிரதமராக பொதுஜன பெரமுன உறுப்பினர் நியமிக்கப்பட்டால் நாட்டு மக்கள் அதனை அங்கீகரிக்க மாட்டார்கள். சர்வதேசமும் அதனை வரவேற்காது.

பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த ஒருவர் பிரதமரானால் நாட்டின் பிரச்சினைகள் மேலும் உக்கிரமடையும். எனவே, அடுத்த பிரதமராக சஜித் பிரேமதாஸவை தெரிவு செய்வதே பொருத்தமானதாக இருக்கும். – என்றார்.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம்-61

**சம்பந்தனினதும் சுமந்திரனினதும் அரசமைப்பு**

தமிழ் மக்களிடையே இருக்கும் இந்த உள்ளக முரண்பாடுகளையும். அந்த முரண்பாடுகளுக்கு இணக்கம் கண்டு யதார்த்தமான பொது நிலைப்பாடுகளுக்கு வராமல், அந்த முரண்பாடுகளை மேலெடுத்துக் கொண்டு செல்வதற்கான தீவிரங்களையும் சற்று நோக்கும் போது, அரசியல் ரீதியாக, சர்வதேசத்திலும் தமிழ் மக்கள் எவ்வளவு தேங்கி நிற்கிறார்கள் என்பது புரியும்.



தமிழ் மக்களுக்கு அநீதிகள் இழைக்கப்பட்டுள்ளன, அவற்றுக்கு நீதி செய்யப்பட வேண்டும் என்ற கரிசனைகள் சர்வதேசத்திடம் உண்டு. நீதியை நோக்கிப் போகும் போதுதான் அநீதியின் தாக்கங்களும் கோரங்களும் பாதிப்புகளும் தெரியவரும் அவற்றிலிருந்து எவ்விதத்தில் நீதி தரப்பட வேண்டும் என்ற கணிப்பும் உருவாகும்.

பட்டினியில் வாழ்வதைவிட கஞ்சியாவது குடித்து, சுதாகரித்துக் கொண்டு, பின்னர் கால மாற்றங்களை ஒட்டி சோற்றுக்கோ புரியாணிகோ போகலாம். அதற்கு வருகின்ற கஞ்சி ஏதோ தொண்டாக, நன்கொடையாக வருகிறதா, அப்படித்தந்து கஞ்சியிலேயே வாழ்க்கையை நடத்திவிடச் செய்யும் எண்ணமா என்ற புரிந்துணர்வுகளும் இருக்க வேண்டும்.

ஒரு புதிய அரசமைப்பின் மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு என வரையப்படும் யாவையுமே இருக்கின்ற நிலையில் தண்ணீர் பந்தல் கஞ்சிகளாகத்தான் இருக்கும். பேரினவாதத்தை சட்டங்களால் வாய்க்கால்கள் போட்டு அடைத்து விட முடியாது. அதற்கு உள்ளார்ந்த மன மாற்றங்கள் வேண்டும். மகாவம்ச மனவமைப்பிலிருந்து விடுபட வேண்டும். அந்த சிந்தனைகள் தொடர்பில் பேரினவாதிகளின் பெரும்பாலானோரிடம் மாற்றங்கள் ஏற்படுவதாகத் தெரியவில்லை.

போருக்குப் பின்னான காலத்தில், சம்பந்தனும் சுமந்திரனும் கூட்டமைப்புப் பக்கத்தில் இருந்து பெரும்பான்மையில் உள்ள சிங்கள மக்கள் தாங்கள் வசிக்கின்ற ஒரே ஒரு நாட்டில் தங்களது தேசியத்தை பாதுகாத்துக் கொள்ள விரும்பு-வதை புரிந்து, அனுசரித்துத்தான் தமிழ் மக்கள் தங்களது தேசியத்தை முன்னெடுக்க வேண்டும் என்ற அறிவுரைகளில் சில முன்னெடுப்புகளைச்செய்கிறார்கள். ஆனால் பேரினவாதத்தினால் ஆட்கொள்ளப்பட்ட சிங்கள மக்களில் பெரும்பான்மையானோர் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தியவைதான் தமிழ் மக்களை அவர்களது தேசியத்தையும் இறைமையையும் கோர வைத்தது எனக் கருதுகிறார்கள்.

இப்பொழுது அல்ல 1907ஆம் ஆண்டிலேயே மதிப்பு வாய்ந்த ஆனந்த குமாரசுவாமி "தம்முடைய வாழும் மக்களுக்கான கடமைகளையும் அவர்களுக்கு உரித்தான உரிமைகளையும் மதிக்காது, அந்த மக்களின் பாதிப்புக்களில் தங்களை உயர்த்திக் கொள்பவர்களின் நோக்கம் தேசியம் அல்ல, அது ஏகாதிபத்தியம் என்ற வியாதி" – எனக் கருத்துப் பதிந்தார்.

சிங்களத் தேசியம் ஏகாதிபதிகளாகத் தமிழர்கள் உரிமைகளையும் வாழ்வாதாரங்களையும் பறித்தெடுத்தமை மட்டுமல்லாமல் அவர்களது உயிர்களுக்கே சாவு மணி அடிக்க தொடங்கி, சங்குகள் ஊதிய போதுதான், தமிழ் மக்கள் தங்களது இறைமையை மீள பெற்றுக் கொள்ள தீர்மானம் நிறைவேற்றினார்கள்.

இவற்றிற்காக எது வித மன உளைச்சல்களும் காட்டாது, அந்த மனக்கலேசங்களிலும் எவ்விதமான வருத்தங்களும் இன்றி, இவற்றுக்காக அரசமைப்புச் சட்டத்தில் சில மாற்றங்கள் வந்துவிட்டால் இந்த பேரினவாத சமூகம் இனிமேல் நீதியாக நடந்து விடுமென சம்மந்தனும் சுமந்திரனும் எதிர்பார்க்கிறார்களா?

தமிழ் மக்களுக்கு பாரம்பரியமான பிரதேசங்கள் உண்டு, அவற்றில் அவர்களுக்கு தனித்துவமாக வாழ உரிமைகள் உண்டு என்பதை ஏற்காத அரசமைப்புச் சட்டம் எவ்வளவுதான் வர்ணங்கள் பூசப்பட்டாலும் பேரினவாத நிலைப்பாட்டை, ஜே.ஆர். வெளிப்படுத்திய தர்மிஷ்ட கோட்பாடுகளுக்குத்தான் நடைமுறையில் கொண்டு செல்லும் என்பதை தமிழ் பரப்புகள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

தங்களது வாக்கு வேட்டைகளுக்காகவும், தேர்தல் வெற்றிகளுக்காகவும் முரண்பாடான அரசியல் கோரிக்கைகளை முன்வைத்து, அவற்றைத் தமிழ் தேசியத்திற்கான முத்திரையிட்டு, சர்வதேசத்திலும் ஆதரவற்ற நிலைகளை ஏற்படுத்துகிறார்கள்.

இவை பற்றிய பதிவுகள் வந்த போது, சமகால ஊடகங்களில் வெளியானவற்றைப் படித்தவர்களும் என்னோடு சில சம்பாசணைகளை முன்னெடுத்து சில கேள்விகளையும் எழுப்பினார்கள்.

அவர்களில் பலர் சுமந்திரன் ஏன் இப்படி மற்றவர்களிலும் பார்க்கக் கருத்துக்கள் தெரிவிப்பதிலும் அரசியல் தலைமைகள் மாற்றப்பட வேண்டும், புதிய அரசமைப்புச் சட்டம் அமைவது அவசியம் எனவும் அதிகம் பேசுகிறார், இவ்வளவு தூரம் பேச்சுக்கள் தமிழ் மக்களுக்கு அனுகூலமானவையா, வரலாறுகள் தெரிந்து, அவற்றில் அனுபவப்பட்டுத்தான் பேசுகிறாரா, அல்லது தமிழ் மக்களின் நிலையை பாவித்து தேசியமட்ட அரசியலில் கால்பதித்து விட முனைகிறாரா என்பவை போன்றவை தொடர்பில் சுமந்திரனை ஒட்டி சில கருத்துக்கள் கூறியிருந்தேன். அவை மீண்டும் பரிமாறப்பட்டன. ஆனால் அனுபவக் குறைவினாலோ அல்லது தான் தனது மனதுக்குப்பட்டதை நேர்மையாகச் சொல்லிவிட வேண்டும் என்ற குணாதிசயத்தாலோ சில சமயம் அப்படியான கருத்துக்கள், எப்படி அரசியலில் பார்க்கப்படும் என்ற கபடத்தன்மை இல்லாமல் இவ்வாறு வெளிவரலாம் எனக் கூறினேன்.

தாங்கள் தங்கள் நியதிகளின்படி தத்தமக்குக் கருத்து இருக்கலாம். அவை தமிழ் மக்களால் தீர்மானிக்கப்பட வேண்டியவை. ஆனால் தமிழ் மக்களின் உள்ளார்ந்த குணாதிசயங்களால் சுமந்திரன் பிரதமராகி விடலாம் என்று செய்திகள் முகநூலிலும் ஊடகங்களிலும் வருகின்றன. அதே சமயம் சுமந்திரனும் ஹக்கீமும் தன்னைப் பற்றி பேசியமைதான் தனது வீடு எரிக்கப்பட்டதற்கு தூண்டுகோலானது என ரணில் வைகிறார்.

சுமந்திரன் பிரதமர் ஆனாலும் அல்லது ஜனாதிபதியாகத் தான் ஆனாலும் என்ன, அதனால் நாடாளுமன்றப் பெரும்பான்மை இருக்கும் வரை அந்தப் பதவிகளால் ஏற்ற ஒரு தீர்வு வரக்கூடிய நிலையில் ஸ்ரீலங்கா அரசியல் இருக்கிறதா? எவ்வளவோ செய்வதற்கு இருக்க தமிழ் மக்களின் சிலர் இவ்விதமான வியாக்கியானங்களில் ஆர்வம் காட்டுகிறார்கள்.

பேசிய இன்னொரு நண்பரின் ஆதங்கம், கோபத்திலும் பார்க்க ஆக்ரோமாகவே வந்தது. பல வருடங்கள் எங்களுடன் இணைந்து தமிழ் மக்களின் உரிமைப் போராட்டங்களிலும் அவர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் பற்றியும் இயங்கியவர் அவர். என்றும் அவற்றில் தன்னாலான பணிகளை செய்து கொண்டிருப்பவர். அவர் இரண்டு, மூன்று நார்கள் தொடர்ச்சியாக இலங்கையில் உருவாக்கப்பட்ட அரசமைப்புச் சட்டங்களின் வரலாறு பற்றி அறிவுறுத்தி, இந்தப் பின்னணிகளில் சம்பந்தனும் சுமந்திரனும் தமிழ் மக்களுக்கு தீர்பை இனைத்து ஒரு புதிய அரசமைப்பு ஏற்படுத்தி விடுவார்களா? என்ன அளக்கிறார்கள்? – என்று காரசாரமாகவே கேட்டார். வார்த்தைகளின் காரத்தை நான் பலவாக குறைத்துள்ளேன். அவரும் நானும் சம்பந்தனுடன் சமகாலத்தில் உறவாடியவர்கள். அரசியலை தவிர்த்தாலும் மனித உரிமைகள் விடயத்தில் காட்டிய ஈடுபாட்டில் அவருக்கு மிகுந்த மரியாதை கொண்டவர்கள். சிங்கள மக்களிடையே அவருக்கு இருந்த மரியாதையையும் அறிந்து கொண்டவர்கள். பின்னாளில் அரசியலுக்காக அவர் எதிர்க்கட்சித் தலைவர் பதவி பேரினவாதிகளால் பறிக்கப்பட்டாலும் சம்பந்தனுக்கு அவர்களின் மதிப்பு தொடர்கிறது. இது நண்பர் கந்தசாமி இனங்களுக்கு இடையிலான நீதிமன்றம் சமத்துவத்திற்கான இயக்கத்தில் காரியதரிசியாகப் பல வருடங்கள் பணிபுரிந்து அரசியல் கைதிகளுக்காகவும் கொக்கட்டிச்சோலை போன்றவற்றில் நடந்த பொதுஜனக் கொலைகளின் ஆராய்வுகளுக்காக ஆதாரங்கள் சேகரித்து அவை பற்றிய விசாரணைகளுக்கு ஆதரவு தந்தவர். ஆதலால் அவரது அபிப்பிராயங்கள் ஆழமாகவும், தமிழ் மக்களின் பல பேரிடம் தற்பொழுது ஏற்படும் ஏமாற்றங்களின், அழுத்தங்களின், ஆதங்கங்களின் பிரதிபலிப்பாகவும் இருந்தன.

**(தொடரும்)**



காலைக்கதிர்
Kalaikkathir

# வீடு வந்து சேருமா வேளாண்மை?

— கம்பவாரிதி இ.ஜெயராஜ் —

உளம் மகிழ, கடைசியில் மக்கள் புரட்சி வென்றுவிட்டதைப் பற்றியே இன்று பலரும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். எல்லோரது முகங்களிலும் ஆயிரம் ‘வாற்ஸ் பல்ப்பின்’ ஒளிப் பிரகாசம். ‘இனி என்ன? மக்கள் எழுச்சியால் நம் இடர் எல்லாம் தீர்ந்துபோய்விட்டது’ என்பதாய்ப் பேசி மகிழ்ந்து நிற்கும் இம் மக்களின் மனநிலையைக் காணக் கவலையாய் இருக்கிறது. இவர்களின் மகிழ்ச்சியில் முழுமையாய்க் கலந்து கொள்ள முடியாது, மகிழ்ச்சியும் கவலையுமான மனநிலையில் நான் தத்தளித்து நிற்கிறேன்.

முதலில் என் மகிழ்ச்சிக்கான காரணத்தைச் சொல்கிறேன்.

எமதுநாட்டின்ஜனநாயகஅமைப்பில், ஒரு தலைமையைத் தேர்ந்தெடுக்கும் உரிமை மக்களுக்கு வழங்கப்பட்டிருந்தாலும், தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமை தவறிழைக்கும் பட்சத்தில், அத் தலைமையை மாற்றும் உரிமை, மக்களுக்கு வழங்கப்படவில்லை. பிழை கண்டு தலைமையை மாற்றும்படி நீதிமன்றங்களுக்குச் சென்றால்கூட, அங்கு குற்றங்கள் நிரூபிக்கப்படுவதற்கு முன்பாக, அத் தலைமையின் ஆட்சிக்காலம் முடிவடைந்துவிடும் அவலம்தான் நிதர்சனமாய் இருக்கிறது.

அதிலும் தமிழினத்தை ஒடுக்கவென, தந்திரத்தையே தன் வடிவாய்க் கொண்ட



ஜே.ஆர். அவர்கள் அமைத்த, தற்போதைய புதிய அரசமைப்பில், ஜனாதிபதிப் பதவி என்பது யாராலும் அசைக்க முடியாத ஒன்றாகத்தான் பெரும்பாலும் உருவாக்கப்பட்டிருக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசைக் கூட நிராகரிக்கும் உரிமை கொண்டவரான ஜனாதிபதியை, எதிர்க்கும் ஆற்றலோடு எந்த அரசும் இருப்பது கடினமேயாம். அதற்குமேல் குற்ற விசாரணைப் பிரேரணையால் ஜனாதிபதியை நீக்குவது என்பதெல்லாம்கூட வெறும் ஏட்டுச்சுரைக்காய்க் கறிகள்தான்.

இந்தப் பிழையான அதிகாரத்தை வைத்துக் கடந்த கால ஜனாதிபதிகள் செய்த பிழைகளைச் சகித்துக் கொண்டுதான் இந்நாட்டு மக்கள் வாழவேண்டும் என்று இருந்த அவல நிலையை, இன்று நடந்த மக்கள் புரட்சி மாற்றியிருக்கிறது (மாற்றிவிட்டதா? என்பதும் இதுவரை ஐயமாய்த்தான் இருக்கிறது). மனம் மகிழ்வதற்கான ஒரே காரணமாய் இதனைத்தான் சொல்ல முடியும்.

இந்த ஒரு காரணத்தை விட்டால், நடக்கும் சம்பவங்களால் கவலைப்பட வேண்டிய விடயங்கள் தான் பலவாய் இருக்கின்றன. அவை பற்றிய எனது எண்ணங்களைக் கீழே வரிசைப்படுத்துகிறேன்.

★ புரட்சி செய்து வென்றிருக்கும் மக்கள் குழு, குறித்த ஒரு தலைமையைக் கொண்டு இயங்காதது, இன்று நடந்திருக்கும் மக்கள் புரட்சியின் மிகப்பெரிய பலவீனமாகிறது.

★பொதுவில் நின்று, மக்களின் உணர்ச்சியைக் கிளறச் செய்துவிட்டார்கள். இனிக் கிளர்ந்தெழுந்த மக்களின் எல்லை மீறும் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தப் போவது யார்? எப்படி? எனும் வினாக்கள் மிகப்பெரிய கேள்விகளாய் எழுந்து நிற்கின்றன.

★மக்கள் புரட்சி வென்றுவிட்டதாய்ப் பலரும் சொல்கிறார்கள். அப் புரட்சியால் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரை விரட்ட முடிந்திருக்கிறது என்பது உண்மையே(?). இவற்றால் மட்டும் புரட்சி வென்றதாய்ச் சொல்லமுடியுமா? இத் தலைவர்களின் பதவி இழப்புக்குப் பின்னான நாட்டின் நன்மை நோக்கிய நகர்வுக்கு, இப் புரட்சி எப்படித் துணை செய்யப் போகிறது? தலைமையற்ற இப் புரட்சியாளர்கள் தமது மேல் நகர்வை, எப்படிச் செய்யப் போகிறார்கள்? இந்தக் கேள்விகள் எல்லாம் பெரும் குழப்பம் தருகின்றன.

★நெறி செய்யும் தலைமையில்லாத இம் மக்கள்புரட்சியில், வெற்றியின் பின் மக்கள் நடந்து கொள்ளும் முறைமை கவலை தருகிறது. ஒரு பெரிய விடயத்தைச் சாதித்துவிட்டு, ஜனாதிபதியினதும் பிரதமரினதும் இல்லங்களில் புகுந்து, அவர்களின் சமையலறையிலும் நீச்சல் குளத்திலும், கட்டிலிலுமாகக் குதித்துக் கொண்டாட்டம் போட்டுக்கொண்டிருக்கும் இளைஞர்களின் செயலில், சமநிலையற்ற இவர்களது தன்மையைத் தெளிவாய் உணரமுடிகிறது. தொடர்ந்து, இவர்களை இனிக் கட்டுப்படுத்தப் போவது யார்? எனும் கேள்வியும் விஸ்வரூபம் எடுக்கிறது.

★புரட்சிக்காரர்களாய், ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் இருப்பிடங்களுக்குள் நுழைந்த இளைஞர்களிடம், அப் புரட்சிக்கு ஏற்ற பொறுப்புணர்ச்சியைக் காண முடியவில்லை. தலைவர்களை வெளியேற்ற நடந்த இப் பெரிய போராட்டத்தின் பயன், அத் தலைவர்களின் மாளிகையைக் கைப்பற்றி அனுபவிப்பதுதானா? என்ற கேள்வியைத் தவிர்க்க முடியவில்லை.



★ஜனாதிபதியும், பிரதமரும் தலைமறைவான பிறகு, போராட்டக்காரர்கள் அதனையேதம்வெற்றியாய் இன்றுவரை



கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். நாட்டின் இக்கட்டான இன்றைய நிலையை மாற்றும் அடுத்த கட்ட நகர்விற்கு அவர்களிடம் திட்டம் ஏதும் இருப்பதாய்த் தெரியவில்லை என்பது பெரிய குறை.

★கடந்த சில நாள்களாக, முடிவெடுக்கும் தலைமை ஏதும் அற்ற நிலையில் நாடு அனாதரவாய் நிற்கிறது! இது மிகப் பெரிய ஆபத்து. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி, இந் நாட்டின் எதிரிகள் எப்படியெல்லாம் உள்நுழையப் போகிறார்களோ? என்று அஞ்ச வேண்டி இருக்கிறது.

★மக்கள் புரட்சியாளர்கள் இதுவரை எந்த அரசியல்வாதிகள் மீது பிழைகண்டு போராடத் தொடங்கினார்களோ, அதே அரசியல்வாதிகள்தான் புரட்சியால்



நிகழ்ந்திருக்கும் இன்றைய அரசியல் சூழ்நிலையை மாற்ற முயன்று கொண்டிருக்கிறார்கள். அவர்களைவிலக்கிவிட்டு, புதிய அரசியல் தீர்வினைக. காண, ஓர் தலைமையைத் தரமுடியாதிருக்கும் நிலைமையானது, மக்கள் புரட்சியாளர்களின் மிகப்பெரிய தோல்வியாய்க் கருதப்படவேண்டியிருக்கிறது.

★ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரைப் பதவியிலிருந்து இறக்கியாகிவிட்டது என்றே வைத்துக் கொள்வோம். அடுத்த ஜனாதிபதியையோ, புதிய நாடாளுமன்றத்தையோ தேர்ந்தெடுக்க வேண்டுமானால், புதிய தேர்தலை இனி நடத்தவேண்டும். இன்றைய நிலையில் அதற்கான பொருளாதார வசதி நம் நாட்டினிடத்தில் இருக்கிறதா? எனும் கேள்வியும் அச்சம் தரவே செய்கிறது.

★ஜனநாயக நிர்வாகம் முற்றாகச் சேதமடைந்து கிடக்கும் இன்றைய நிலையைப் பயன்படுத்தி, நம் நாட்டில் இருந்தோ, வெளி நாட்டிலிருந்தோ இங்கு இராணுவ ஆட்சி புகுத்தப்பட்டால், இந் நாட்டின் கதி என்னாகும்? என அஞ்சாமல் இருக்க முடியவில்லை.

★புதிய தேர்தல் நிகழும்வரை தற்காலிகமாக அமைக்கப்படும் அரசினை நம்பி, நம் மக்களின் இன்றைய அவசர நிலைக்கு, ஏதேனும் நாடுகள் உதவி செய்ய முன்வருமா என்பது பற்றியும் சிந்திக்க வேண்டியிருக்கிறது.

★நிறைவாக, முக்கியமான ஒன்றைச் சொல்லவேண்டும். கூட்டம் கூடி, ஓரளவு வன்முறையும் கலந்து, வெற்றி பெற்ற இப் புரட்சிப் பாதையில், மக்கள் தொடர்ந்து பயணிக்கத் தலைப்பட்டால் இந் நாட்டில் எவரும் எப்போதும் நிம்மதியாய் இனி ஆட்சி நடத்த முடியாமல் போய்விடும் என்பது நிச்சயம். அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால், கட்டுப்படுத்துவாரின்றி இயங்கும் மக்கள் கூட்டத்தால், தேசம் சிதையும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

★உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லலாம். இப் புரட்சி வென்ற இரண்டு நாள்களில் மலையகப் பகுதியில் ஒரு பேரூந்து தற்செயலாய்க் கவிழ்ந்து இரண்டு பேர் மரணிக்க, புரட்சி வென்ற மனநிலையில் இருந்த மக்கள் கூட்டம், உணர்ச்சிக் கொந்தளிப்பில் காரணமின்றி அந்தப் பேரூந்தைக் கொளுத்தித் தள்ளியிருக்கிறது. ஜனநாயக நாட்டில் மக்கள் தான் மன்னர்கள் என்பது உண்மைதான்! அதற்காக ஒவ்வொருவரும் தாமே மன்னர் எனும் நினைப்பில் தறிகெட்டு நடந்தால் நாட்டின் நிலைமை என்னாவது? நினைத்துப் பார்க்க அச்சம் சூழ்வதைத் தவிர்க்க முடியவில்லை.

– இவை எல்லாம்தான் எனது கவலைக்கான காரணங்கள். நமது அனுபவம் மிக்க தமிழ்ப் பெரியவர்கள் ’சிறு பிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது’ என்று ஒரு பழமொழியைச் சொல்லியிருக்கிறார்கள். ஆழமாகச் சிந்தித்துச் சொல்லப்பட்டபழமொழி இது. அப்பெரியவர்கள், சிறு பிள்ளை வேளாண்மை விளையாது என்று சொல்லவில்லை. வீடு வந்து சேராது என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். சிறு பிள்ளைகளின் ஊக்கத்தால் விளைச்சல் உண்டாகும். அந்த விளைச்சலைக் கண்டு தாம் வென்றுவிட்டதாய்க் கருதி, சமநிலை இழக்கும் அப் பிள்ளைகள் தடுமாறி, உண்டான விளைச்சலை வீடு கொண்டு வந்து சேர்க்கத் தவறி விடுவார்கள் என்பதைத்தான் இப் பழமொழியினூடு நம் பெரியவர்கள் உணர்த்தியிருக்கிறார்கள்.

இங்கும் அதுதான் நடந்திருக்கிறது. சிறு பிள்ளைகள் தம் ஊக்கத்தால் விளைச்சல் கண்டுவிட்டார்கள். ஆனால் அவ் விளைச்சலை அவர்கள் வீடு கொண்டுவந்து சேர்ப்பார்களா? கேள்வி பயமுறுத்துகிறது. அடுத்த சில நாள்களில் இக் கேள்விக்கான விடை கிடைக்கும் என்று நம்பலாம்.

காலைக்கதிர் Kalaikkathir

# ஆங்கிலத்தில் முருகபூபதியின் ‘நடந்தாய் வாழி களனி கங்கை’

## Mystique of Kelani River


எழுத்தாளரும் ஊடகவியலாளருமான லெட்சுமணன் முருகபூபதிக்கு இன்று 71 ஆவது பிறந்த தினமாகும். அதனை முன்னிட்டு, அவர் ஏற்கனவே எழுதிய ‘நடந்தாய் வாழி களனி கங்கை’ நூல் Mystique of Kelani River என்ற தலைப்பில் இம்மாதம் கிண்டிலில் மின்னூலாக வெளியாகிறது.

இதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கும் நூர் மகரூப் முகம்மட், ஏற்கனவே முருகபூபதியின் சில ஆக்கங்களை மொழிபெயர்த்தவர் என்பதும் குறிப்பிடத்தகுந்தது.

நூர் மகரூப் முகம்மட், கவியரசு கண்ணதாசனின் வனவாசம் நூலையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவராவார்.

நடந்தாய் வாழி களனி கங்கை கிழக்கிலங்கையிலிருந்து வெளியான அரங்கம் இதழில் முன்னர் தொடராக வெளியாகி, கொழும்பு குமரன் பதிப்பகத்தினால் வெளியிடப்பட்டது.

அரங்கம் இதழின் ஆசிரியர் திரு. சீவ




கன் பூபாலரட்ணம் தனது அணிந்துரையில் இந்நூல்பற்றி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்:–

கொழும்பு – பார்ப்பவர் ஒவ்வொருவருக்கும் ஒரு கதை சொல்லும் ஒரு மண். இலங்கையின் தலைநகர் என்பதற்கு அப்பால் இலங்கையின் சரித்திரத்தில் மிக முக்கியத்துவம் கொண்ட ஒரு மாநகரம். இலங்கை வாழ் தமிழரைப் பொறுத்த வரையிலும் கூட அவர்களின் தாயகம் வெவ்வேறு நகரங்களாக இருந்தாலும் ஏதோ ஒரு வகையில் கடந்த காலங்களில் அவர்களின் கதையோடு இணைந்துவிட்ட ஒரு ஊர் அது.

தமிழர் சந்தித்த கலவரங்கள் பெரும்பாலும் மையம் கொண்ட இடமாக கொழும்பு இருந்துள்ளது. அவர்களது வாழ்விடமாக அது இருந்துள்ளது. அவர்களுக்கு பொருளாதார ரீதியாக வளம் கொடுத்த மண்ணாக அது இருந்துள்ளது.

வடக்கு – கிழக்கில் இருந்தும், மலையகத்தில் இருந்தும் தலைநகர் வாழ்க்கையை நோக்கி ஓடிவருவோருக்கு கொழும்பு காண்பிக்கும் கோலங்கள் பல. ஆனால், எங்களைவிட, கொழும்புக்கு அண்மித்த நகரான நீர்கொழும்பில் பிறந்த முருகபூபதி அண்ணனுக்கு அது கொடுத்த காட்சிகள் வேறானவை. அனுபவங்கள் வேறானவை.

அவற்றைக் கொண்டு கொழும்பின், அதன் அடிநாதமான களனி கங்கையின் தீரத்தில் நடந்த நிகழ்வுகளை இங்கு காவியமாக வடிக்க அவர் முயற்சித்திருக்கிறார்.

வீரகேசரி பல எழுத்தாளர்களை விளைவித்த ஒரு களம். அங்கு உருவானவர்களில் மிகவும் முக்கியமானவர்களில் ஒருவர் முருகபூபதி அண்ணர். அவர் அங்கு பணியாற்றிய காலத்தில் நான் அங்கு இல்லை.


ஆனால், அவரோடு அந்தக் காலங்களில் பணியாற்றிய பலர் பெரும் ஆளுமைகள். ஆனால், அவரது அனுபவம், கற்கை ஆகியன வெறுமனே வீரகேசரியை மாத்திரம் மையம் கொண்டவை அல்ல. அதனையும் கடந்து தான் பிறந்த மண்முதல் தான் இப்போது வாழும் ஆஸ்திரேலியா வரை உலகெங்கும் அவர் கண்ட அனுபவங்கள் அவரது எழுத்தில் தெரியும்.

கடினமான எழுத்து நடையல்ல. வீரகேசரி வாசகனுக்கும் மித்திரன் வாசகனுக்கும் ஒரே நேரத்தில் விளங்கக்கூடிய ஒரு நடை அது. நாங்களும் பார்த்துக் கற்க வேண்டிய மொழி நடை.


அதே எழுத்து நடை நடந்தாய் வாழி களனி கங்கை யையும் அழகுபடுத்தியுள்ளது. புதுவிதமான கொழும்பை, அதன் அண்டை இடங்களை எங்களுக்கு அது அறிமுகம் செய்துள்ளது.

அந்த மண்ணில் வாழ்ந்த மக்களின் கதையை, உழைப்பை, உயர்வை, சுமையை, சோகத்தை, அழிவை, இரத்தத்தை, தன்னுள் கலந்து ஓடும் களனி கங்கை தனது தீரத்தில் பார்த்த கதை இது.

கிழக்கு மாகாண மக்களுக்கு ஒரு பத்திரிகை தேவை என்ற அடிப்படையில் உருவானது அரங்கம் செய்திகள் பத்திரிகை. கிழக்கு மக்களுக்கு தலைநகர் கொழும்பையும் அதன் அண்டிய இடங்களையும் பற்றி பல புதிய தகவல்களை முருகபூபதி அண்ணனின் இந்தத் தொடர் கூறியது. இது மாத்திரமன்றி இன்னும் பலவும் அவர் எங்களுக்கு எழுதியுள்ளார். உலகெங்கும் உள்ள தமிழர்களுக்கும் அவர் எழுதியுள்ளார். இந்த நூலை ஆக்




கும் அவரது முயற்சிக்கு எமது வாழ்த்துகள் உரித்தாகும். அவர் இன்னும் படைக்க வேண்டும் என்றும் வேண்டுகிறோம். – என்று உள்ளது.


நூர் மகரூப் முகம்மட்

இந்நூல் தற்போது Mystique of Kelani River என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் வெளியாகிறது.

இதனை கிண்டிலில் பதிவேற்றுபவர் ஓவியரும் எழுத்தாளருமான திரு. கிறிஸ்டி நல்லரெத்தினம் .

மேலதிக தகவல்களுக்கு:
chrisanz27gmail.com
letchumananmgmail.com

---

## கட்டுநாயக்கா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிலையத்துக்கு அடுத்துள்ள இராணுவத் தளத்தில் அன்றைய இரவைக் கழித்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று 13ஆம் திகதி பதவி விலகுவார் எனவும், அமைதியான அதிகார மாற்றத்துக்கான வழியைத் தெளிவுபடுத்துவார் எனவும் ஏற்கனவே அவர் உறுதியளித்திருந்தார்.

எனினும், அவர் தப்பிச் செல்லாமல் தமது சொந்த நாட்டிலேயே சிக்கியுள்ளார் என்று ஏ.எவ்.பி. செய்திச் சேவை குறிப்பிட்டுள்ளது.

73 வயதான ஜனாதிபதி கோட்டாபய, கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக, தாம் பதவி விலகுவதற்கு முன் வெளிநாடு செல்ல விரும்பினார் என்று நம்பப்படுகின்றது.

எனினும், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் குடிவரவு அதிகாரிகள் அவரது கடவுச்சீட்டை முத்திரையிட மறுத்துவிட்டனர்.

இதேவேளை, முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் நேற்று அதிகாலை வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்ல முயற்சித்த வேளை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் குடிவரவு அதிகாரிகளால் தடுக்கப்பட்ட நிலையில் மீண்டும் திரும்பிச் சென்றுள்ளார்.

இதையடுத்து இலங்கைக் குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகள், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில், பிரபுக்களுக்கான பட்டுப்பாதை பயணிகள் அனுமதி முனையத்தில் நேற்றுக் காலை முதல் மறு அறிவித்தல் வரை பணிகளில் இருந்து விலகியுள்ளனர்.

நாட்டில் தற்போது நிலவும் ஸ்திரமற்ற மற்றும் நெருக்கடி நிலை மற்றும் குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் அரசியல் பிரமுகர்கள் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் இந்தப் பட்டுப்பாதை அனுமதி முனையத்தைப் பயன்படுத்தி நாட்டை விட்டு வெளியேறுவதற்கான பலமான சாத்தியக்கூறுகளைக் கருத்தில்கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் கே.ஏ. ஏ.எஸ். கனுகல தெரிவித்துளார்.

இதனால் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பட்டுப்பாதை பயணிகள் அனுமதி முனையத்தின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இதையடுத்து மத்தள மஹிந்த ராஜபக்ஷ விமான நிலையத்தின் குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளும் தமது கடமைகளில் இருந்து விலகியுள்ளனர்.

இதேவேளை, கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பஸில் ராஜபக்ஷ ஆகியோருக்கு விமான நிலையங்களின் ஊடாகத் தப்பிச் செல்ல முடியாத நிலையில், கடற்படைக் கப்பல் மூலம் இந்தியா அல்லது மாலைத்தீவுக்குச் செல்வதே தற்போதுள்ள வழியாகும் என்று பாதுகாப்புத் தரப்பை கோடிட்டு செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# மெல்பேர்னிலிருந்து தமிழ் முழங்கும் லெ.முருகபூபதி ‘எழுத்தாளன்’ எனும் அடையாளத்தின் முகவரியாளர்

## புகலிட இலக்கிய வாழ்வியல் சாதனையாளரும்தான்

— ஐங்கரன் விக்கினேஸ்வரா —

**ஆஸ்திரேலியாவில் வதியும் எழுத்தாளர் லெ.முருகபூபதியின் 71ஆவது பிறந்த நாள் இன்றாகும். அதனையொட்டி இக்கட்டுரை இன்று பிரசுரமாகின்றது.**

‘எழுத்தாளன்’ என்ற அடையாளம் தான் எனது முகவரியென்றால், அதனை தக்கவைத்துக் கொள்ளவேண்டியதும் எனது பொறுப்பாகும். ஆயினும் என்னை நேசிக்கின்ற இலக்கியவாதிகள் இலங்கையில் மட்டுமன்றி உலகெங்கும் பரந்து வாழ்ந்து, ‘மனிதன்’ என்ற முகவரியை எனக்கு தந்திருக்கிறார்கள். அதனை தக்கவைத்துக்கொள்வதுதான் எனது வாழ்வும் பணியுமாகும் என மெல்பேர்னில்இருந்துதமிழ்முழங்கும்லெட்சுமணன் முருகபூபதியின் 71ஆவது அகவை நாள் (பிறந்நாள் – ஜூலை 13, 1951) இன்றாகும்.


**வீரகேசரியில் ஊடகப்பணி**

ஈழத்துப் புகலிட இலக்கியப்பரப்பில் லெ.முருகபூபதி தனக்கெனப் பல முத்திரைகளைப் பதித்துக்கொண்டவர்.

இலங்கையின் வடமேல் மாகாணத்தில் நீர்கொழும்பில் பிறந்தவர் லெ.முருகபூபதி. வீரகேசரியில் 1972 ஆம் ஆண்டு தொடங்கிய இவரது ஊடகப்பணி மற்றும் இலக்கியப்பணி இன்று வரை தொடர்கின்றன என்பது அவரின் வாழ்வியல் சாதனையாகும்.

லெ.முருகபூபதி சமூக கலை இலக்கிய செயற்பாட்டாளராக தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றார். நீர்கொழும்பு இலக்கிய வட்டத்தின் செயலாளராகவும், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தேசிய சபை உறுப்பினராகவும், அதனது கொழும்புக் கிளையின் செயலாளராகவும் இருந்தவர்.

அதன் பின்னர் 1987ஆம் ஆண்டு




ஆஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்ந்து, இங்கு தமிழ் எழுத்தாளர் விழாக்களை நடத்துவதில் முன்னின்று உழைப்பதும் கவனத்துக்குரியது.

2011ஆம் ஆண்டில் கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டின் பிரதம இணைப்பாளராகச் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

லெ.முருகபூபதி 1972 இல் ‘கனவுகள் ஆயிரம்’ சிறுகதை மூலமாக மல்லிகையில் அறிமுகமானார். 1975 இல் வெளியான சுமையின் பங்காளிகள் என்ற இவரின் முதலாவது சிறுகதைத்தொகுதிக்கு இலங்கை சாகித்திய மண்டல விருதும் கிடைத்தது. வீரகேசரி நாளிதழில் துணை ஆசிரியராக பணியாற்றியவர். ரஸஞானி, ரிஷ்யசிங்கர் என்ற புனைபெயர்களிலும் எழுதி வருகிறார்.

**லெ.முருகபூபதி படைப்புக்கள்**

‘படைப்பாளியின் வேலை வாசகனின் சிந்தனையில் ஊடுருவுவதுதான். அதுதான் படைப்பின் வெற்றியாகும். அதனை வாசகனே தீர்மானித்துக் கொள்வான். எதனையாவது படித்துவிட்டு உங்கள் எழுத்துக்களினால் நான் திருந்தி விட்டேன், மாறிவிட்டேன் என்று எவரும் சொன்னால் அதனைக்கேட்டு மகிழ்ச்சியடையலாம். எமது மகிழ்ச்சியை பறைதட்டி முழக்கிச் சொல்லவேண்டிய அவசியம் இல்லை’ எனக் கூறும் லெ.முருகபூபதியின், ‘பறவைகள்’ நாவலை தஞ்சாவூர் பல்கலைக்கழக மாணவி ஒருவர் தமது MPhl பட்டத்திற்காக ஆய்வுசெய்துள்ளமை பாராட்டுக்கு உரியதே.

1975 இல் வெளியான லெ.முருகபூபதியின் சிறுகதைத் தொகுதியான ‘சுமையின் பங்காளிகள்’ இலங்கைத் தேசிய சாகித்திய விருது பெற்றது. அத்துடன் ‘சமாந்தரங்கள்’ (1989), ‘வெளிச்சம்’ (1998), ‘எங்கள் தேசம்’ (2000), ‘கங்கை மகள்’ (2005), ’நினைவுக்கோலங்கள்’ (2006), ‘மதக செவனெலி’ (Shadows Of Memories) – மொழிபெயர்ப்பு (2012), ‘கதைத் தொகுப்பின் கதை’ (2021), ‘பறவைகள்’ (2001) ஆகிய சிறுகதைத் தொகுதிகளையும் லெ.முருகபூபதி படைத்துள்ளார்.

1985 இல் வீரகேசரி ஆசிரியர் குழுவில் இருந்த போது சோவியத் ஒன்றியத்தின் அழைப்பில் உலக இளைஞர் – மாணவர் விழாவில் கலந்து கொண்டு, பயண இலக்கியமான சமதர்மப்பூங்காவில் நூலை லெ.முருகபூபதி 1990இல் வெளியிட்டுள்ளார்.

**ஆஸ்திரேலியாவில் தமிழ்ப் பணி**

கடித இலக்கியமான ‘கடிதங்கள்’ (2001), நேர்காணல் சந்திப்பு (1998) இலக்கிய மற்றும் ஊடக வாழ்வில் சந்தித்த ஆளுமைகளின் கருத்துக்களை தொகுத்து எழுதிய நூல், மற்றும் கட்டுரை நூல்களான நெஞ்சில் நிலைத்த நெஞ்சங்கள் (1995) தமிழ், சிங்கள, முசுலிம், சோவியத் உக்ரைன் இலக்கிய நண்பர்கள் 12 பேரைப்பற்றிய நினைவுத் தகவல்கள், இலக்கிய மடல் (2000), மல்லிகை ஜீவா நினைவுகள் (2001), எம்மவர் (2003), ஆஸ்திரேலியத் தமிழ் எழுத்தாளர்கள் பற்றிய விவரத்திரட்டு நூல் களையும்எழுதியுள்ளார்.

கவிஞர் அம்பி வாழ்வும் பணியும் (2004), ராஜ ஸ்ரீகாந்தன் நினைவுகள் (2005), உள்ளும் புறமும் (2011), சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டின் தோற்றமும் வளர்ச்சியும் பயன்பாடும், சொல்ல மறந்த கதைகள் (2014), சொல்ல வேண்டிய கதைகள் (2017), சொல்லத்தவறிய கதைகள் (2019), இலங்கையில் பாரதி ஆய்வு நூல் (2019), நடந்தாய் வாழி களனி கங்கை (2021), யாதுமாகி (2022), வாழும் வரலாறு மல்லிகை ஜீவா (2022) எனஇதுவரையில்பலநூல்களைலெ.முருகபூபதிதமிழ் இலக்கியத்திற்காக படைத்துள்ளமை வரலாற்றுச் சாதனையாகும்.

**தேசிய சாகித்திய விருதுகள்:**

‘பரிசுகள் உச்சங்களை தீர்மானிப்பதில்லை. வாசகர்களிடம் பெறும் வரவேற்புத்தான் உச்சம். சிறுகதைகளை படிக்கும் வாசகனின் சிந்தனையில் அது ஊடுருவவேண்டும். படித்த பின்னர் சில காலம் – ஏன் நெடுங்காலம் – வாசகரின் மனதில் ஒரு சிறுகதை நின்றால் அதுதான் உச்சம்.

எனது சில கதைகள் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அவற்றை மொழிபெயர்த்தவர்கள் பார்வையில் அவை உச்சமாக இருந்திருக்கலாம் எனக் கூறும் லெ.முருகபூபதி பெற்ற விருதுகள் பல.

சுமையின் பங்காளிகள் நூலுக்கு 1975 ஆம் ஆண்டு சிறந்த சிறுகதைத் தொகுதிக்கான இலங்கை அரசின் தேசிய சாகித்திய விருது கிடைத்தது.

பறவைகள் நூலுக்கு 2002ஆம் ஆண்டு சிறந்த நாவலுக்கான இலங்கை அரசின் தேசிய சாகித்திய விருதும் கிடைத்தது. அத்துடன்

2002 அவுஸ்திரேலியா தினத்தில் சிறந்த பிரஜைக்கான விருதும் கிடைத்தது.

புலம்பெயர் இலக்கியம் என்பது ஈழத் தமிழர்கள் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்து இலக்கியம் படைத்த பின்னர்தான் பேசுபொருளானது.

போர் குறித்து எழுதினால் அது போர்க் கால இலக்கியம்.

**புலம்பெயர் இலக்கியப் பணி**

“நான் ‘கருத்து முரண்பாடுகள் ஒரு மனிதனின் மேன்மையை இனம் காண்பதில் தவறிழைத்துவிடல் தகாது என்பதில் நான் திடசித்தமானவன்’ என்ற வால்டேயரின் கூற்றுடன் உடன்பாடு மிக்கவன். இலக்கிய உலகில் பயிலத் தொடங்கிய நாள் முதலாக அல்ல, அதற்கும் முன்பே எனது இயல்பு அப்படித்தான். எனவே, கலை, இலக்கிய தேவை நிமித்தம் நான் சந்தித்தவர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட கருத்துக்களையும் அனுபவங்களையும் பதிவு செய்வதிலும் ஆர்வம் கொண்டிருந்தேன்” எனக் கூறும் முருகபூபதிக்கு அவரின் வாழ்வையும் பணிகளையும் சித்திரிக்கும் ரஸஞானிஎன்ற ஆவணப்படத்தை 2017 இல் மெல்பேர்ன் எழுத்தாளர் எஸ்.கிருஷ்ணமூர்த்தியும் வீடியோ கலைஞர் மூர்த்தியும் இணைந்து தயாரித்து வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

**இலங்கை மாணவர் கல்வி நிதியம்**

ஈழத்தில் நீடித்த போரில் தந்தைமாரை இழந்த ஏழைத்தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவும் திட்டம் ஒன்றை ஆஸ்திரேலியாவில் இலங்கை மாணவர் கல்வி நிதியம் (CEYLON STUDENTS EDUCATIONAL FUND) என்ற அமைப்பை அவர் ஸ்தாபித்தார்.

இந்த அமைப்பு தமது பணியில் 27 ஆண்டுகளை நிறைவுசெய்து தொடர்ந்தும் இயங்குகிறது என்றால் அதற்குரிய பெருமை லெ.முருகபூபதிக்கே உரித்தாகும்.

இலங்கை மாணவர் கல்வி நிதியத்தால் ஆயிரக்கணக்கான மாணவர்கள் தொடர்ந்தும் பயனடைந்து வருகின்றனர். இன்றும் இந்த அமைப்பின் ஊடாக பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் வடக்கிலும்கிழக்கிலும்உதவியைபெறுகின்றனர். போர் முடிவுக்கு வந்ததும் வருடம்தோறும் அங்கு சென்று மாணவர்களை நேருக்கு நேர் சந்தித்து உதவிகளை இக்கல்வி அமைப்பு மேற்கொள்கிறது.

இந்தப்பணியில் பலரும் இணைந்து தாயக மாணவர்களுக்காக உதவி வருகின்றனர்.

“எழுத்து எனது தொழில். இலங்கையில் எனக்கு சோறுதந்த தொழில்.



அதனால் அதனைவிட்டு நான் அகல மாட்டேன். புகலிடத்தில் வேறு தொழில்களில் ஈடுபட்டு குடும்பத்திற்காக உழைத்த போதிலும் நான் ஊதியம் எதுவும் பெறாமலேயே எழுத்துத்துறையில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளேன்” – எனக் கூறும் முருகபூபதி இலங்கையில் மல்லிகை, ஞானம் முதலான இலக்கிய இதழ்களில் அட்டைப்பட அதிதியாகவும் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

“எனது வாழ்நாளில் கலை, இலக்கிய வாதிகளை மாத்திரமின்றி அரசியல் தலைவர்கள், தொழிற்சங்க வாதிகள், சமூக சேவையாளர்கள், பிரமுகர்கள், தொழிலாளர்கள் உட்பட பலதரப்பட்டவர்களையும் பத்திரிகை, சஞ்சிகைகளுக்காக நேரில் சந்தித்திருக்கின்றேன். பொது வாழ்க்கை எனக்கு புதியதல்ல. தாயகத்திலும் பல்வேறு பொதுப்பணிகளில் ஈடுபட்டேன். இன்றும் ஆஸ்திரேலியா விலும் இலங்கையிலும் பொது வேலைகளில் ஈடுபடுகின்றேன். இலக்கியம், எழுத்து பொதுவாழ்க்கை என்பனதான் எனது வாழ்க்கை” – என மெல்பேர்னிலிருந்து தமிழ் முழங்கும் லெ. முருகபூபதி

2004 ஆம் ஆண்டு முதல் இயங்கி வரும் தமிழ் இலக்கிய கலைச்சங்க ஸ்தாபக உறுப்பினருமாவார்.

மேலும், ஆஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச்சங்கம், விக்ரோரியா ஈழத் தமிழ்ச்சங்கம், மெல்பேர்ன் தமிழ்ச்சங்கம் முதலான அமைப்புகளின் பாராட்டுக்களையும், விருதுகளையும் பெற்ற லெ. முருகபூபதி தமிழ் கலை இலக்கிய உலகிற்கு தொடர்ந்து சேவையாற்றிட அவரின் அகவை நாளினில் வாழ்த்திடுவோம்.

